# அகத்தியர் 100

சரசுவதி மகால் நூலகம்

சரசுவதி மகால் வெளியீட்டு எண். 250

# அகத்தியர் 100

சிறப்புக் கேண்மைப்பதிப்பாசிரியர் :

டாக்டர் **ச. அரங்கராசன்**, பி. ஐ. எம்.,

*மாவட்ட சித்தமருத்துவ அலுவலர்,*

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

*தஞ்சாவூர்.*

2005

விலை : ரூ. 40-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | அகத்தியர் 100 |
| பதிப்பாசிரியர் | : | டாக்டர் ச. அரங்கராசன், பி. ஐ. எம்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 250 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | செப்டம்பர், 2005 |
| தாள் | : | TNPL 11.8 கி. கி |
| நூல் அளவு | : | 24 x 18 செ. மீ. |
| பக்கங்கள் | : | 84 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | சித்த மருத்துவம் |
| விலை | : | ரூ. 40-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

எண்ணற்ற இலக்கிய நூல்களையும் மருத்துவ நூல்களையும் சுவடி மூலங்களிலிருந்து பதிப்பித்து வெளியிடுகின்ற பணியினைத் தொடர்ந்து சிறப்பான முறையில் சரசுவதி மகால் நூலகம் ஆற்றி வருகின்றது. அவ்வகையில் 1988ஆம் ஆண்டு சரசுவதி மகால் நூலகத்தால் முதற்பதிப்பாக வெளியிடப்பெற்ற அகத்தியர் 100 என்னும் மருத்துவநூல் இப்பொழுது மூன்றாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

மூலச் செய்யுள்களையும், அவற்றுக்கான உரையையும் கொண்டு திகழும் இந்நூல் சித்த மருத்துவத் துறையினருக்கும், பொதுமக்களுக்கும் பயன்மிகு நல்கும் என நம்புகிறேன். இந்நூலைப் பதிப்பித்து அளித்துள்ளவர் மருத்துவர் திரு. ச. அரங்கராசன் அவர்களாவார், பதிப்பாசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் சிறப்பாக வெளிவரச் செயலாற்றிய சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*22-9-2005*

# முன்னுரை

அக. 100 என்ற இந்நூல் சுவடி எண் 691 – காப்பீட்டு பிரதி 2539ல் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ளது. இது காரசாரம் மற்றும் இரசவாதம் பற்றிக் கூறுகின்றது. இது முற்றுப் பெறாத நிலையில் உள்ளது. எனினும் இரசவாதம் பற்றிய தற்காலக்கருத்துகளுக்கு இணையாக உள்ளது.

இதன் ஆசிரியர் அகத்தியர் என்று கூறப்பட்டாலும், பிற்கால ஆங்கில முறை அளவான 'டிராம்' என்பது, அவரால் செய்யப்பட்ட ஒன்றல்ல என்பதை உறுதி செய்கின்றது. ஆங்கிலேயர்கள், ஜஹாங்கீர் காலத்திலேயே இந்தியாவிற்கு வந்துவிட்டார்கள். அவர்களுடைய வருகைக்குப் பின்பே இந்நூலாக்கப்பட்டிருத்தல் கூடும்.

முக்கியமாக இந்நூலில் சுன்னவகைகள் மற்றும், தங்கம் போன்ற உலோகங்களை ஈயமாக (வங்கம்) மாற்றும்முறை விளக்கப்பட்டுள்ளது. தற்கால விஞ்ஞானப்படி, அடர்த்தி எண் அளவை மாற்றினால் ஈயத்தைத் தங்கமாக்க இயலும் என்றறிந்து உள்ளார்கள். முற்காலத்திலேயே இதனை எவ்விதமான விஞ்ஞானக் கருவிகளும் இன்றி மெய்ஞான வழியில் கண்டறிந்த திறமை வியப்பூட்டும் தன்மை வாய்ந்தது. தற்கால வேதியலார் இவற்றைப் பரிசோதனை செய்வது, நாட்டிற்கு நலம் தரும் ஒன்றாகும்.

இதில் 'நந்தி' என்ற சொல் வருகின்றது. நந்தி என்பது சமண சமய உட்பிரிவுகளில் ஒன்று. இதனைத் தேவாரத்தில் காணமுடியும். நந்திக் கணம் என்பதாகப் பேசப்படும். இதற்கும், நந்தி வழி சித்தர்கள் மரபுக்கும் உள்ள தொடர்பு ஆய்ந்து அறியத்தக்கது. ஏனெனில் தமிழ்க் கீழ் கணக்கு இலக்கியங்களான திரிகடுகு, ஏலாதி, சிறுபஞ்ச மூலம் என்பன சமணர்கள் தந்த நூல்கள். மேலும் சமண சமயக்கொள்கைப்படி ஔடத தானம் (மருத்துவ உதவி) மிக முக்கியமான நான்கில் ஒன்றாகும். என்றாலும் இந்நூலாசிரியர் சைவ சமயத்தவர் என்பதைத் தெய்வ வழிபாடு சுட்டிக் காட்டுகின்றது. நந்தீசர் (பாடல் 3) நந்தி (69) தாரணி (8,57) அரகரா (16) சிவம் (28, 82) மனோன்மணி (60, 69) வாகினி (71)

பல்வேறு மருந்துப்பொருட்களைச் செயநீர் கட்டு, களங்காக மாற்றும் முறையும், ரசவாதம் செய்யும் முறையும் கூறப்பட்டுள்ளன. கடினமான உலோகப்பொருட்களை மடியச்செய்ய வேண்டிய கட்டாயம் மருத்துவர் களுக்கு முற்காலத்தில் இருந்து வந்தது. பச்சிலைச் சாறுகளால் அரைக்கப் படுவதற்குப் பதிலாக உருக்கி, அதன் வன்மையை அழித்து மருந்துகளாக மாற்ற வேண்டிய அவசியமும் மருத்துவர்களுக்கு இருந்து வந்ததற்குச் சான்றுகளாக அமைவதுவே, செயநீர், திராவகம், புகைநீர் என்பன. பச்சிலைச் சாறுகளால் அரைகுறையாக அரைத்து, மடியாமல் புடமிடப் பட்டு, தரப்பட்ட மருந்துகளால் ஏற்பட்ட எதிர்விளைவுகளின், தாக்கமே

சித்தர்களைச் செயநீர், புகைநீர், மூப்பு, திராவகம், சுன்னம், வாலை என்று ஏனைய வழிகளில் செயல்பட வைத்தது. எனவே, காரசாரத்துறை சித்தமருத்துவமுறைக்கு அடித்தளமாய் அமைந்தது. அரைத்து, புடமிட்டு, பற்பசெந்தூரமாக்குவதற்குப் பதில் சுன்னமாக்கி, தருவதுவேகமாக பயனளித் ததும், ஒரு காரணமாகலாம். கால தாமதத்தைத் தவிர்த்திடும் கட்டாயம், செயநீர், புகைநீர் திராவகம் இவற்றுக்கு வழிவகுத்துத் தந்திருக்க முடியும்.

இரசவாதம் என்பது பொன்னாசையைத் தூண்டி, அதன் மூலம் மக்களுக்கு வேதியல் முறையை அறிந்து கொள்ளச் செய்யும் ஒரு வழியாக அக்கால சித்தர்கள் கையாண்டு வந்துள்ளனர். இதிலும் ரசவாதமுறையால், பொன்னாசையால் பொருள் இழந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. நூலறிவால் மட்டும் அறிவதன்று இரசவாதம். தக்கபடி குருமுகமாக அறிந்து கொள்ளவும். அத்தகைய குருமகான் கிடைத்து, அவரிடமிருந்து இரசவாத செய் முறையை அறிந்து கொள்ளும் நல்லதொரு வாய்ப்பும் இருப்பது அவசியம் என்று இந்நூல் வலியுறுத்தும்.

ஏராளமான உவமைகளைக் கையாண்டு உள்ளார் இந்நூலாசிரியர். எண்ணெய் (பா.எ.5.25) பாம்பு (நாகம்) (பா.எ.33, 72, 73, 74) நாய் போல் அலைதல் (பா. எ.39) மாடுபோல் நீரைவிடுதல் (பா.எ.60) சகதியிலே கல் எறிதல் (பா.எ.60) மாடு போலத்திரிதல் (பா. எ. 71) வருணன் பிள்ளை (பா. எ 84) மதயானையை, பிடியானை கொண்டு (பா. எ.3) பிடித்தல், யானை மேல் சகடு வைத்து ஏறுதல் (பா.எ.39) காமப்பால் (பா.எ 85) வண்ணான் (உழவனுப்பு அல்லது சவர்க்கார உப்பு.) முருக்கம்பூ (பா. எ. 50).

நூல் வரலாறு கூறுமிடத்தில் பூரணம் என்ற நூலைப் பின்பற்றக் கூறு கின்றார். பூரணம் என்பது அகத்தியர் 12000 என்பதாகும். பூரணம் என்ற பெயரில் 1000,400 என்பன அகத்தியர் பெயரில் உள்ளன. இந்நூலாசிரியர் ரசவாதம் 1 லட்சம் எண்ணிக்கை எனவும் வைத்தியம் 2 லட்சம் எண்ணிக்கை எனவும் கூறியுள்ளார். இந்நூலாசிரியரே 3 லட்சம் பாடிய தாகக் கொள்ளாமல், முன்னோர்கள் செய்த நூல்கள் என்றே எடுத்துக் கொள்ளவும். இதில் பாதி நூல்கள் ரசவாதம் பற்றியது என்பது அவரின் வாக்காலறியலாம். இந்நூலாசிரியர் காவியம் 1000 செய்ததாகவும், அதைச் சுருக்கி 200 செய்ததாகவும், கூறுகின்றார். ஆனால் நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் மொத்தம் 85 ஆகும். ஏனைய கிடைக்கவில்லை. பூரணம் என்பது இவர் செய்த காவியம் 1000 என்ற நூலின் வழி, இரசவாதம் செய்தல் வேண்டும் என்பதே உட்பொருளாகும்.

சித்த மருத்துவ நூல் வரலாறு ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ் மருத்துவர்கள் தமிழ் வல்லுநர்கள் இவ்வழியில் அரும்பணி ஆற்றுவார்களாக.

இந்நூல் வெளியிட நிதி உதவி செய்த நடுவண் அரசுக்கும், அனுமதி தந்த மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவரும் சரஸ்வதி மகால் நூலக இயக்குநருமாகிய, திரு T.R. இராமசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும், இந்நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி இ. ஆ. ப. அவர்களுக்கும் சரஸ்வதி மகால் நூலகர் திரு. பஞ்சநாதன், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ். அவர்களுக்கும், நூல் நன்முறையில் அமையத் தக்க கருத்துக்களைக் கூறிய Dr. S. பிரேமா M.D இணைப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர்கட்கும் செப்பம் செய்த புதுக்கோட்டை நல்லாசிரியர் திரு. சொக்கலிங்கம் அவர்களுக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

— மருத்துவர் ச. அரங்கராசன்

# அக. ரசவாதம் 100

## காப்பு

1. ஆதியா மணக்கோலஞ் செய்யு நாளில்
ஆதிமுதல் தேவரிஷி கூட்ட மாச்சு
வேதியனு மாயேனுந் தானும் நி.........
மலரு ஷ்சுவனுக்கு வரத்தை ஈந்தார்
நீதி பெற சாருதிற......... தெட்சரு......... ம
நிலையான சார்பொதிகை கிரி சென்றேன்
ஆதியொரு காரணத்தால் பகைறதா னின்ற
வாகடந்தா......... பரமா அருளைப் பாரே.

**பொருள் :**

காப்புச் செய்யுளில் அகத்தியர் பொதிகை மலையை அடைந்த, புராண வழக்கு, கூறப்படுகின்றது. அங்கு, அவர் வாகடம் என்ற மானிட மற்றும் விலங்கு மருத்துவம் செய்த வரலாறு விளக்கப்படுகிறது.

## நூல் வரலாறு

2. பாரப்பா வாதத்தி லெட்சம் காப்புப்
பாடினேன் வயித்தியத்தி ரெண்டு லட்சம்
சீரப்பா காவியத்தில் ஆயி ரந்தான்
சிறப்பாகப் பாடியதோர் என்நூ லப்பா
சாரப்பா ஆயிரத்தை இருநூ றுக்குட்
சகல சேதியெல்லாம் மடக்கிப் போட்டே
நாரப்பா என்பாட்டுக் கொ ப்புமுண்டோ
அரகரா அடிமுடியில் அமர்ந்திட் டேனே.

**பொருள் :**

காப்பு செய்யுளை அடுத்து, அகத்தியர் ரசவாதம் பற்றிய இலட்சம் பாடல்கள் அடங்கிய நூலையும் மருத்துவத்தைப்பற்றி இரண்டு லட்சம் கொண்ட நூலையும் இயற்றினார் என்று கூறப்படுகிறது. அகத்தியர் 1000, அதன் சுருக்கம் 200 என்றும்,இந்நூல் ஒப்புமை இல்லாதது என்றும் கூறப்படுகின்றது.

# 2

## கார சாரம்

3. அமர்ந்தோர் ஆனைக்கல் அறிய மாட்டார்
அப்பனே அண்டமது அறிய மோடா
சுமந்தபிணம் போல்திரிவார் வேதை காணார்
சொல்லுகின்ற உப்பு...தை அண்டஞ்
சரகந்த மாகையிலே போன உயிர் மீண்டு
தானாலே நந்தீசர் இந்தமுறை அருளிச்செய்வார்
சமன் சிறு ... கொல்லுங் கொல்லுங்
தண்டான மது உப்புசார மாச்சே.

**பொருள் :**

பாடல் மூன்றுல், காரசாரத்தைப் பற்றிக் கூறுகின்றது. நந்தி வழியில் இதைச் செய்தல் வேண்டும் எனவும், ரசவாதத்தை ஏனையோர் முறைகளில் செய்தல் முடியாது எனவும் கூறுகின்றது.

4. சாரமென்றும் காரமென்றும் வழலை என்பார்
தன்னுக்கூடப் பயஞென்றும் சொல்லார் சொல்லார்
பூரமென்று சொல்லுவதற்கும் பரவிப் பேசார்
புகழான் மதயானைக் கல்லைப் பேசார்
வீரமென்று அண்டமென்றும் விள்ளார் விள்ளார்
வேதைகளைப் பாடிவிட்டார் வெறுநூ லாகப்
காரமென்ற கடுங்காரம் சாரங் காய்ச்சல்
கம்பியுப்பே பூரமப்பா அடிதான் பாரே.

5. அடியொன்று முடியொன்று அண்ட பேரண்ட
ஆகாசம் சுவருப்புக் கம்பி யாச்சு
படியொன்று சொல்வதற்கு தலைதெரிந்துப் போகும்
பேசாத மௌனமிது பூமிநா தங்கு
குடியென்று சொல்லுதற்குத் தண்ணீ ருண்டாம்
குலையானை பட்டுவிடும் சாரச் சுண்ண
மடியுமப்பா சரக்கெல்லா மிதிலே மாட்ட
மக்களே காயசித்தி மகிழ்ந்து பண்ணே.

6. பண்ணப்பா பண்ணப்பா உரிசை சாரம்
பரிவான வழலைநிலு உப்பென் பார்கள்
மண்ணப்பா பூத்தானந்த வழலைக்கு

பெரிது போல் பிண்டமாச்சு.
விண்ணப்பா தண்ணீரா மேலுண் டாச்சு
விதமான கல்லுப்பு ... நாதம்
ஒண்ணப்பா ... சாறு ... இந்திருலே
ஒகோகோ வழலைவிட்டார் கடற் தண்ணீரே.

7. கல்லான கல்லுக்குக்கு முப்பு சேந்து
கல்லுப்புச் சுன்ன மென்ற பேருமாச்சு
சொல்லான விந்தாலே சூடம் கட்டும்
துடிவழலைப் பாம்பெலலே சொல்லாச்சு
வெல்லுகின்ற காரத்தால் சாரம் கட்டி
வெடிச்சத்தம் கண்டல்லோ முடிதான் போச்சு
வல்லான புயத்தானை ... ட்டி தென்றால்
வளமான ஆகாசமடிந்து போமே.

8. மடியாத விந்தாலே ரவிதான் கட்டும்
வாதிகாள் உங்களுக்கு வழலைச் சுண்ணம்
பிடியானை கைவசங்காண மதயானைக்கு
பற்றி பாதநிலவு அறப் பெருமை பேசார்
அடி என்றால் வாய்மூடப் பிடரிபேசு
அப்பனே சுக்கிலத்தை அறிய மாட்டார்
படியான உட்கருதான் தண்ணீரானால்
பரியாச வேதையிது கொஞ்சஞ்தானே.

## பொருள் :

பாடல் 4 முதல் 8 வரை, காரசாரம் பற்றிக் கூறப்படுகின்றது காரத்தையும், சாரத்தையும் 'வழலை' என்பார்கள். இதை பயன்படுத்துவது பற்றி, ஒன்றும் சொல்லமாட்டார்கள். பூரம் என்பதற்கும், வீரம் என்பதற்கும் விளக்க மாட்டார்கள். புகழ் பெற்ற 'யானைக்கல்' பற்றிக் கூறமாட்டார்கள்; ரசவாதம் பற்றியவைகளைப் பேசுகின்றார்கள், ஆனால் விளர்க்க மாட்டார்கள் காரம் என்று கூறப்படும் காரசாரம், காய்ச்சல் என்பன

அடியாகவும், முடிவாகவும், அண்டம் என்றும் பிற அண்டம், ஆகாசம் என்றும் உள்ளது கம்பி உப்பு. இதனை படிக்கச் சொல்லுவதற்குள், தலை உடைந்து போகும். எனவே, பேசாமல், மவுனமாய் இருக்கவும்.

பூமியின் நாதம், குடி என்று சொல்லுவதற்கு தண்ணீரில் விளையும் பூற்று. மெருக்கழியாத உலோகச் சரக்குகள்,சாரச் சுண்ணத்தால், மடியும். சரக்குகளை இதில் மடித்து மக்களுக்குத்தர, காயம் சித்தியாகும்.

வழலையை நிலஉப்பு என்பார்கள். மண்ணில் பூத்துவரும், பெரிய பிண்டம் என ஆகும். தண்ணீரில் உண்டாகும் என்று கூறுவாயாக. விதமாக கல்லுப்பு, நாதம் என்பார்கள், கடற்தண்ணீரில் வழலை உண்டாகும்.

கல்லுப்பு, மூப்பு சேர்த்திட கல்லுப்பு சுன்னம் என்ற பெயர் உண்டாகும். சூடம் ரசத்தால் கட்டுப்படும். [உருகி ஓடும்] வழலைப் பாம்பு என்று பெயரால் அழைக்கப்படும். காரத்தால் சாரத்தைக் கட்டி, வெடிச்சத்தம் கேட்க, பயனில்லாமல் போகும். வலிமையுள்ள கையால்...... வளமான கம்பியுப்பு மடிந்து போகும்.

மடியாத ரசத்தால் சவுக்காரம் கட்டுப்படும் வாதிகளே, உங்களுக்கு வழலைச் சுன்னம், பிடியானைக் கொண்டு, மதயானை கைவசப்படுத்தல் ஒக்கும். சுக்கிலம் என்ற ரசத்தை அறியமாட்டார்கள். உட்கரு, நீராக மாறினால் பரியாச வேதை இது கொஞ்சம் போட, ரசவாதம் ஆகும்.

**பாடல் 9 :**

கொஞ்ச மென்று சொல்லாமல் சொல்லக் கேளு
கொடிதான மேற்தோட்டைச் சுன்னம் பண்ணி
வஞ்சியென்று உட்கருச் சேர்க்கை முறையாய்
மக்கள் மகத்தான வழலையினால் தண்ணீ ராகும்
சஞ்சீவிக் கெங்கை பாச மூல மெல்லாம்
தாரணியின் அப்பாலே இவ்வளவு மாச்சு
நஞ்சுதின்று செத்தவன் போல் சரக்கெல்லாம்
சாம அதிகாரசாரத்தால் மெழுகுண் டாமே.

**பாடல் 10:**

மெழுகான உப்பாலே பூரம் கொல்லும்
விஷமான காரத்தால் சாரம் சாகும்

பழுதான சேதியல்லா வழலை போக்கு
பண்பான ரகசியமது பூ ணத்தான்
எழுதரிது என்றாலே முடியா தப்பா
என்னைப்போல திறமாகச் சொல்ல மாட்டார்
ஆகாகபின் ... வேதை கோடி
அடிமூல பூரணத்தால் அறிந்து பாரே.

*பொருள் :*

பரியாச வேதையை, சிறிது என்று எண்ணாதே. ரசத்தின் மேற்தோட்டை சுன்னம் (ரச சுன்னம்) செய்து, வழலையைச் சேர்க்க தண்ணீராய் நீற்றுப் போகும் நஞ்சு தின்று செத்தால் போல எல்லா மருந்து சரக்குகளும், சாம நேரத்தில் மெழுகாய் மாறும். மெழுகாய் ஆன உப்பால், பூரம் மடித்து போகும். பாடாணமான காரத்தால் நவச்சாரம் என்பன போன்றவை மடியும். பழுதில்லா செய்தி, வழலையின் தன்மை; இது ரகசியமானது. பூரணம். எடுத்துக்கூறுதல் எனக்கு எளிமையானதல்ல; ஆனால் திறமையாய் என்போல் சொல்ல, யாரும் மாட்டார்கள். வேதையை, கணக்கற்ற, அடிமூல பூரணத்தால் அறிந்து கொள்வாயாக. (பூரணம் என்பது பரிபூரணம் என்ற நூலாகக் கொள்ளலாம். அல்லது பூரணம் என்ற பெயர் கொண்ட நூலைக் குறிப்பிட்டு கூறி இருக்கலாம்.)

*11.* அஞ்சிடையாய் இன்னுமோ வென்று கூட்ட
வெறிவு கொள்ள வெடியுப்பு ரெண்டும் கூட்டி
விசையான சத்தியடி அஞ்சும் கூட்டி
சரிவதற்கே பூநீராலரைத்து வந்தால்
செப்பமுடன் புடம்போடச் சுன்னமாச்சு
அறியில் வெண்ணையிதுதானே கல்லுப்பாச்சு
ஓகோகோ கல்லாணக் காரந்தானே.

*பொருள் :*

வேதையை ஐந்து எடையாக இன்னும் கூட்டி வெடியுப்பு இரண்டு பங்கு சேர்த்து, விசையாய் உள்ள சக்தி ஐந்தும் சேர்த்து, பூநீரால் அரைத்து, புடமிட சுன்னம் ஆகும். வெண்ணெய் போலிருக்கும், கல்லுறுப்பு. இது கல்லாணக்காரம் ஆகும்.

*பாடல் 12 :*

காரமென்ற கடுங்காரம் கல்லா ணைக்குக்
கடியதொகு சின்னவத்து சேர்த்தாலே
காரமென்ற கடுங்காரஞ் சொல்லப் போமோ

கல்லுறுப்புச் சுன்னம் என்ற பேரே யாச்சு
சாரமென்ற கடுஞ் சாரஞ் சூடனப்பா
சாரமிது செத்தாக்கால் கார சாரம்
வீரமொன்று சொல்லுவதற்கு வாய்தா ருகும்
விள்ளார்கள் பெரியோர்கள் வேதை போக்கே.

**பொருள் :**

காரம் எனப்படும் கடுங்காரம்(வெங்காரம், படிகாரம், சவுக்காரம் இவற்றில் சவுக்காரம் என்ற உவர்மண்ணையே இங்கு குறிப்பிடுகின்றார்) யானைக்கல் (பூநீறு) என்பதான பொருளாக, காரம் என்ற கடுங்காரம் என்று சொல்லலாமா? இது கல்லுப்பு சுன்னம் என்பதாய் ஆனது சாரம் என்ற கடுஞ்சாரம் சூடம். சாரம் என்பது போக, காரசாரம் வீரம் என்பதாகும். இதனை பெரியார்கள் கூற மாட்டார்கள், வேதையின் போக்கை என்று அறிவாயாக.

## திராவகம்

13. போக்கான சேதியப்பா சொல்லக் கேளு
பூரணத்தி அப்பாலே எல்லா மாளுந்
தாக்கான சேதியப்பா திராவ கந்தான்
தனித்த வெடியுப்பென்று உழத்தான் ளென்று
வாகான சூடனென்று கறியுப் பொன்று
வளர்சின கற்றமொன்று சார மொன்று
நீக்கா க.........ங்கொன்று இந்துப் பொன்று
நீ...ச் சம்பழத்தா வரைத்துக் கூட்டே.

14. அரைத்த மருந்தை ரவியிலே காயவைத்து
அப்பனே பொடியாக்கிக் கலசத் திட்டு
கரைக்கவசற் தனைமேலாய் மூக்குக் கீழாய்
கைமுறையாய் எண்சீலை மண்ணுற் செய்து
புகைக் கடங்கப் புகைதீரா எரித்திட் டாலே
போதமுள்ள நீராலே உப்புச் சுன்னம்
கரைக்குள்ளில்லை கற்பூர மீதிலே ஏற
கரையில்லை நிலையில்லைச் சுன்னப் போக்கே.

**பொருள் :**

என் கருத்துக்களைக் கூறுகின்றேன். எல்லா விதமான உப்பு, உபரசம், பாடாண, உலோக வகைகள் உருமாறி, உருவி ஓடும்படியான பூரணமான

திராவகம் செய்முறை பற்றிக் கூறுகின்றேன்; கேட்பாய் தனியாக வெடியுப்பு பூநீறு, சூடம், கறியுப்பு இந்துப்பு, ஒவ்வொன்றும் 1 பங்கு எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கூட்டு, அரைத்த மருந்லைத சூரிய புடத்தில் வைத்து, காய வைத்து, பொடியாகச் செய்யவும் பாத்திரத்திலிட்டு, எண் சீலை மண் கவசமிட்டு மூடவும். பின் தலைகீழாக வைத்து, எரிக்கவும். புகை வராமல் எரிக்க வேண்டும். உப்புச் சுன்னம் உண்டாகும். சுன்னம் கரையாது கெட்டியாய் இருக்காது.

## கட்டு, செயநீர், மெழுகு, செந்தூரம்

15. கல்லுப்புச் சுன்னமப்பா சொல்லக் கேளு
துரைவெள்ளைப் பாஷாண வீரஞ் சுக்கும்
சுன்னமப்பா மஞ்சாடி தடவிச் சென்று
சுண்ணாம்புக் கல்லப்பா மரக்கால் பத்து
எண்ணமுள்ள தாழம்பால் மரக்கால் பத்து
இதைநீற்றுப் பாஷாணம் கட்டிப் போகும்
உண்ணவது தாம்பிரமது கழஞ்சிக் குத்தான்
ஒரு மஞ்சாடி கொடுக்க வெள்ளையாமே.

16. ஆமப்பா ஒன்பதரை தப்பா துண்மை
அதிகசுண்ணத் திராவகந்தாஞ் சொல்லாச்சு
ஆமப்பா கண்டபடி சொன்னோம் சொன்னோம்
நலமான ... ... டடுக்குச், செயநீர், கேளு
நேமப்பா அரிதாரஞ் சூடம் சீனம்
சங்குபொரி காரம்பூ வீரம் சாரம்
மாமப்பா வகைக் கொன்று திராவகந்தான்
அரகராக் கட்டுவகை செயநீர் தானே.

17. தானென்ற நீர்தனிலே சகல மெல்லாம்
தண்டுண்டு சாகுமப்பா மெழுகு பண்ணு
வேனென்ற மெழுகுவகைத் திராவ கந்தான்
எளிதல்லத் துருசிபூ வீரஞ் சாரம்
சீனமொடு வெடியுப்பு மடல்பூ ரத்தான்
சோகவிது கழஞ்சி யொன்று வகைவீ தத்தான்
நானுமலே நுணுக்கி ஒரு கலசத்திட்டு
உத்தமனே எரியிட்டே செய்நீ ராமே.

பாடல் 18:

செயநீரால் கட்டியதோர் சரக்கெல் லாந்தான்
திறமாக மெழுகாகும் வேதை காணு
மானதொரு செயநீரின் வகையைக் கேளு
அப்பனே வழலையோடு வீரம் பூரம்
மூணுன கெந்தி மால்தேவி லிங்க
உத்தமனே வெடியுப்பு அன்ன பேதி
தாணுன புகைநீரைப் பேசப் போமோ
சகலசரக் கெல்லாம்செந்தூர மாமே.

பாடல் 19:

தூர மென்ருல் தூரமல்ல சொல்லக் கேளு
துடியான வெடிசத்தம் கண்ட லாச்சு
பாரமல்ல குரு முடிக்க அப்பா கேளு
பாழிலே கரிச்சிட்டுப் போகா தேநீ
தூரமென்ற கல்லாணை மாட்டு தானல்
கடுஞ்சார இந்தாலே கட்டிப் போச்சு
ஆரமிட்ட கருங்கல்லுச் சொல்லவில்லை
அப்பனே அந்தாளைக் காதி யாமே.

பாடல் 20:

ஆதியென்ற மூலமப்பா சத்தி யாச்சு
அருளான பிண்டமப்பா ஆணைகள்
பாதிபிறை இந்தாலே வழலை யாச்சு
பார் நின்ற பூவாலே சித்தி யாச்சு
சோதியிட்ட பூரணத்தால் விரைச்சுப் போச்சு
சொல்லுவது காய்ச்சலாம் தானே.
நீதியென்ற வாதமெல்லாந் துலங்க லாச்சு
நேரான பூரணத்தி விருத்து பாரே.

பொருள் :

பாடல் 15 முதல் 20 வரை, கட்டு, செயநீர், மெழுகு, செந்தூரம் பற்றிய செய்முறைகளைக் கூறுகின்ருர். வெள்ளைப்பாடாணம், வீரம், சுக்கு என்பன மஞ்சாடி அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்ளைப்

பாடாணத்தை முடிச்சுக்கட்டி, 10 மரக்கால் கிளிஞ்சல் சுண்ணாம்பில் போட்டு நீரிட்டு, நீற்ற வேண்டும். 10 மரக்கால் தாழம்பாலில், மீண்டும் சுண்ணாம்புக் கல்லிட்டு, முடிச்சுக்கட்டி நீற்ற வேண்டும். இப்படி செய்ய வெள்ளைப் பாடாணம் கட்டியாகும். தாம்பிரத்துடன் மஞ்சாடி அளவு இப்பாடாணக் கட்டியைச் சேர்க்க, அது வெண்மை நிறமாகும். இது ஒன்பதரை பங்கு தப்பாது. உண்மையான சுண்ணத் திராவகந்தான், சொன்னோம்.

அடுத்துபடியாக, சுண்ணத் திராவகம் செயநீர் செய்முறையைக் கேட்பாயாக, அரிதாரம், சீனாக்காரம், சூடம், சங்கு, வெங்காரம், வீரம், நவச்சாரம் வகைக்குச் சம எடை எடுத்துக் கொண்டு திராவகம் செய்யலாம். கட்டுவகை, செயநீர்தான் ஆகும்.

செயநீர் செய்முறையைக் கூறுகிறார். இச்செயநீரால் சகலசரக்குகளும் உருமாறும். உருமாறியவுடன் மெழுகு போலாகும். இம்மெழுகு, ஒரு வகை யான திராவகம் ஆகும். இது எளிதல்ல. துருசு, பூரம், வீரம், நவச்சாரம், சீனாக்காரம், வெடியுப்பு, மடல் அரிதாரம் கழஞ்சி அளவு எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் பொடி செய்து, கலசத்திலிட்டுத் தீ மூட்டி எரிக்க, செயநீராகும்.

செயநீரில், சரக்குவகைகளைச் சுருக்குத்தா, நல்ல மெழுகாய் இளகும். வேதையாக மாறும். இப்படிப்பட்ட செயநீர் வகையைக் கேட்பாயாக. வழலை, வீரம், பூரம், கந்தகம், அரிதாரம், லிங்கம், வெடியுப்பு, அன்ன பேதி, புகைநீரால் உருக்க, அவை உருகி, ஓடிச் செந்தூரமாகும்.

குரு முப்பு என்பது இதில் பலவகைப்பட்ட கருத்து வேறுபாடுகள் உள்ளன. மருந்துகள் முடிப்பதற்குத் தேவையான முதல் என்றும் கூறுவர். பாடல் 19, 20 எல்லாம் பரிபாஷையில் உள்ள முறைகள். அவைகள் இன்ன தென்று விளங்கவில்லை. இம்முறைகளை பூரணம் என்ற நூலில் பார்க்கவும் என்று கூறுகின்றார்.

குரு

**பாடல் 21:**

இருந்துரைத்தார் முன்மாதியிலே திங்க ளொன்று
 ரெண்டுதிங்கள் சென்றவுடன் கல்லுப் பாச்சு
அருந்தவத்தால் பெரியோர்கள் சொன்னார் காணு
 அப்பனே பூவெடுக்க வாழ்ந்த மூர்த்தி
பொருந்துவது பூவாலே கட்டிப் போச்சு
 பூரணத்தால் முழக்கட்டுக் கண்ட தாச்சு

திருந்துவது பெண்ணென்ற ஆலணக் கூடிச்
செத்தார்கள் கைமுறையாய் செனித்த வாரே.

பாடல் 22:

வாறுகொண்ட முப்பூவே குருவாச்சு *
மகத்தான குருவாலே பூரச் சுண்ணம்
ஏறுவது கல்லானைக் கட்டின் மேலே
இந்தாலே பூரணமாய்ச் செயநீ ராச்சு
ஊறுவது கூறநீகாண உப்புக் கட்டு
ஓசையிட்ட வீரமிட வேதை யாகும்
தேறுவது கோடான கோடி அற்புதத்
திறமான வேதையப்பா மலைபொன் னாமே.

பாடல் 23:

பொன்னான தோர்கார சார மாகு
பூமிபூர சாரமப்பா பூமி நாத
மின்னான பூவாத்தாள் வெள்ளை முந்தி
வீறுகளை யேகொடுக்கும் பூர ணந்தான்
சொன்னாக்கால் தோணுமப்பா நூலைப் பார்த்துத்
துறைகாணா மடையரைப்போலே சுடாதே நீதான்
ஏன்னாசம் கொண்டதொரு வீண ரைப்போல்
எழுத்திலே விழாதே குருவைச் சென்றே.

பாடல் 24:

குருவான பெரியோர்கள் தம்மைச் செங்கை
குப்பிலே தெண்டனிட்டு சிஷ்ய னாகித்
திரிவதற்குச் சிந்தைகளைச் சோதிப் பார்கள்
திடமான சிந்தையுற்று இருந்தா யானால்
தருவிப்பார் வாதமெல்லாஞ் சீஷ னென்றே
சகலகலைக் கியானமெல்லாந் தானே தங்கும்
மருளாகும் பொருளாகும் ஆசான் தன்னை
அடிபணிந்தா லடிமுடியை அறிவிப் பாரே

---

* ஒரு சீர் இல்லை.

**பாடல் 25:**

அறிவதற்கு குருச்சொல்லார் பாடல் தோறும்
அப்பனே குருவறியார் மூட வாதி
செறிவுகந்த உவர்ப்பூவாம் வேதை யாம்சாம்
சென்ற காய்ச்சல்ல அப்பா சொல்லக் கேளு
உறியில் எண்ணெய் தனை உருக்க நெய்யாய்ப் போகும்
உத்தமனே வழலைஎனும் கார மப்பா
இறுதியப்பா இருந்தாலே குருவாச் சொல்லும்
மேறட்டியே சொல்லுமப்பா உப்பு தானே.

**பாடல் 26:**

உப்பூறி உப்பல்ல சொல்லக் கேளு
உவர்க்கண்ணி லேவிளைந்த வழலை யப்பா
உப்பென்று அதுக்கடுக்க வாழ்த்துவா ரப்பா
ஓகோகோ வாலைநீர் என்று என்று
முப்பூவும் கூட்டியல்லோ குருவாய்ப் போச்சு
முழக்காரந் துரைமேலே ஏற லாச்சு
உப்பான வழலையிது பூர ணந்தான்
உயர்ந்துவெடி யாகாச்ச உப்பு சாமே.

**பாடல் 27:**

சாகுமப்பா கற்பூரம் செத்துப் போச்சு
தனிப்பூரம் கல்லானை வழலைக் காச்சு
போகுமப்பா ஆணைக்கலவுவது பட்டுப் போச்சு
பூரணத்தா இந்தாலே ரவிதான் கட்டி
வேகுமப்பா சரக்கெல்லாம் கண்ட போதே
வெடியுப்பே தாயான மூல மாச்சு
ஆமப்பா இத்தனையு மூவர் கண்ணில்
ஆதித்தன் கண்டல்லோ சோதி யாச்சு.

**பாடல் 28:**

சோதியான சிவமான நிலவுப் புத்தான்
சொல்லுவது வழலையுப்பு மவுன மாகும்
மாதியின...றந்தவனே முடித்த வாதி

அப்பமே ஆக்கியிருப்பா லாச்சு
வேதையென்ற பொருள்எல்லா முப்பு வாகும்
விமலனார் வழலையுப்பை அறிய மாட்டார்
பூதலத்து மானிடரே அறிய மாட்டார்
பொற்பூவும் வாசனைதான் கல்லுப் பாமே.

பாடல் 29:

கல்லுப்பு கல்லுப்பைக் கட்டிக் கொள்ளும்
கல்லானை பட்டுவிழுக் கருவுண் டாகும்
வல்லமையாய் முப்புவும் முடித்தா யானால்
மகத்தான கல்லானை...போகும்
சொல்லார்கள் சொல்லார்கள் பெரியோ ரப்பா
சுத்தரவி வழலையுப்பு சொல்லுங் காணார்
எல்லாரும் கண்டது வராக நீறு
ஏகவெளிச் சிவஅறியார் கல்லுப் பென்றே

பாடல் 30:

கல்லுப்புக் குருவிலானைக் கல்சாரம்
கடுங்கார ஏறுதற்கு பூமி நாதம்
சொல்லக்கேள் நீராலே சுத்தி பண்ணித்
துடியான கல்லானை சுத்தி யாச்சு
அல்லக்கேள் சீனமொன்று மூப்பு மொன்று
அடங்காத ஆகாச வெடியுப் பென்று
அல்லவொத்த சூடனொன்று பச்சை யொன்று
வளமான நுரையண்ட சுண்ணம் ரெண்டே.

பாடல் 31:

ரெண்டுடனே காந்தமொன்று சிப்பி பத்து
நேராக இதையாட்ட சம்ப முத்தால்
ரெண்டுசாண் புடம்போடச் சுன்ன வேகம்
நாதமிது பூவாலத் தனையு மாச்சு
உண்டுகொள்ளு முளைக்கருத்தான் சரிய தாக்கி
ஒன்னாக விரவியதைப் பீங்கானில் வைத்துப்
பண்பின வாகாச் சீன மோடு
பழச்சாற்றில் மோர்கூட்டப் பூர மாச்சே.

**பாடல் 32 :**

ஆச்சப்பா வழலையிது சுண்ணம் பண்ண
அப்பனே துரைஅண்டஞ் சீன மோடு
வாச்சப்பா சாரமிட நீறாப் போகும்
வளமான குடனுக்கே அங்கி பூட்டிக்
காய்ச்சப்பா கல்லானைத் தோட்டுக் குள்ளாய்
கைமுறையாய் ஊதிவரச் சுண்ண மாகும்
வாச்சதொரு பீங்கானி லிருந்து காண
வளமான வழச்சுண்ண மேவி யாடே.

**பாடல் 33 :**

ஆடினா இந்நாலே சிவமாய்ப் போச்சு
அப்பனே மதயானைப் பட்டுப் போச்சு
தேடினால் வாராது சோதி யப்பா
திறமான நீருக்குப் பேர்தான் கேளு
ஓடுகிற பாம்பாடும் வழலை யப்பா
உத்தமனே இந்தாகும் பூர ணந்தான்
சாடித்துப் பூரணத்தால் சார காரம்
தனிமுப்பு வாதிஎன்ற குருவ தாமே.

**பாடல் 34 :**

குருவான நீராலே சுண்ணம் கோடி
கொண்டதோர் செந்தூரம் கோடி கோடி
குருவான நீராலே கட்டு கோடி
குகைதனிலே ஆடுதற்கு களங்கு கோடி
குருவான நீறாலே செயநீர் கோடி
குறிப்பான சாரணைகள் குளிகை யாகும்
குருவான நீறாலே ஆகும் சுத்தி
கொடுஞ்சுருக்கு கொடுஞ் சுருக்கு வழலை தானே.

**பொருள் :**

பாடல் 21 முதல் 34 வரை பல்வேறு வகையான 'முப்பு' பற்றிக் கூறுகின்றார். முதல் முப்பு திங்கள்தோறும் உண்டாகும். இரண்டு மாத முடிவில் 'முப்பு' கல்லுப்பாய் ஆகும். மிக்க தவ வன்மையோர் இது எடுக்கும் வழி முறைகளைக் கூறினார்கள். ஏனையவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை.

மகத்துவமுள்ள குருமருந்தால் பூரம் சுண்ணமாகும். கட்டியின் மேல் இதனாலே பூரணமாகச் செயநீர் கிடைக்கும். செயநீர் ஊறுவதைக் காண்பதற்கு உப்பை இட, அது கட்டியாகும். வீரத்தை செயநீர் இட, அது மாறுபட்டுப் போகும். செய்நீரால் கிடைப்பது கற்பத்திறமுள்ள வேதை. இவ்வேதையால் மலையைக் கூடப் பொன்னாக்கலாம். பொன், காரசாரமாக, மாறும் பூமியின் நாதம், பூநீறு, பூரணமாய் அறிந்து செய்தால், எல்லாம் தரும். வெறும் நூலறிவு மட்டும் கொண்டு, வாதியாக வேண்டாம். வீணாகப் போகும். குருவிடம் சென்று கற்றுக் கொள்ளவும். குருவான பெரியோரை, கை கூப்பி தாள் வணங்கி, சீடனாகித் தெரிந்து கொள்ள வேண்டும். சீடனாக ஏற்றுக்கொள்ள, பெரியோர்கள் சோதிப்பார்கள். அச்சோதனைகளை ஏற்று, ஒரு முகமாக, வணங்கி, இருக்க எல்லா விதமான வாத முறைகளையும் கற்றுத்தருவார்கள் எல்லா முறைகளும், தானே வரும். மருட்சியைத் தரும் பொருட்பற்று, ஆசானின் அடிகளைப் பின்பற்ற வேண்டும். ரசவாத முறையை அறிய, நூல்களை மட்டும் படித்து, ரசவாதம் செய்பவர்கள், மூடவாதிகள். அடர்த்தி மிக்க உவர்ப்பு, வேதையாகும்.

இதைக்காய்ச்சி, எடுக்க, உப்பாகும். உறியில் உள்ள வெண்ணெயை உருக்க, நெய் உண்டாவது போல, வழலை என்ற சாரம் ஏற்படும். இறுகி இருந்தால், குரு என்ற மருந்தாக மாறும். திரட்டிச்சொன்னால், இது உப்பு, சாதாரணமான, நீர் கசியும் சோற்றுப்பல்ல இது. உவர் மண்ணில் விளைந்து, வரும் வழலை என்ற பூநீறு ஆகும். ரசவாதிகள் வாழ்நாள் எல்லாம் இதனைப் பெற வாழ்வார்கள். வாலைநீர், முப்பு சேர்த்துச் செய்ய, குரு மருந்து கிடைக்கும். உப்பான வழலை முழுவதும், உயர்ந்த ஆகாசக் கூறு உள்ள வெடியுப்பு ஆகும். இதில், குரு மருந்தில், கற்பூரம் மடியும். பூரம், கல்லானை (ஆனைக்கல்) வழலையைக் காய்ச்ச, ஆனைக்கல் பட்டுப்போகும். பூரணமாகச் செய்ய, சவர்காரம் கட்டும். இதற்கு எல்லாம் தாய், வெடியுப்பு, மூலம் ஆகும். இத்தனையும் உவர்க் கண்ணினால், சூரிய ஒளியாக மாறும். சோதி, சிவம், நிலவுப்பு என்று சொல்லப்படும், வழலையுப்பு, அமைதியாய் இதனை அறிந்தவனே ரசவாதி. வேதை என்ற பொருட்கள் எல்லாம் முப்பு ஆகும். கடவுள்கூட வழலையை அறிந்திருக்க மாட்டார். பூஉலகு மக்களும் அறிய மாட்டார். பொற்பூவின் வாசனையே கல்லுப்பாகும். கல்லுப்பு, கல்லுப்பைக் கட்டிக்கொள்ளும். யானைக்கல் பட்டு கருவானது ஏற்படும். வலிமைமிக்க, முப்பு செய்து, முடித்துவிட்டால், பெரியோர்கள் இதைச் செய்வது குறித்துப் பேசமாட்டார்கள். தூய இந்துப்பு வழலையுப்பு செய்து, பார்க்க மாட்டார்கள். ஏனையோர் செய்தது எல்லாம் பன்றியின் நீறு. கல்லுப்புப் பற்றி அவர்கள் அறிய மாட்டார்கள்.

கல்லுப்பு குருவாக, கல்சாரம். கடுங்காரம் ஆவதற்குச் செய் முறையைக் கேட்பாயாக. தண்ணீரில் சுத்தி செய்து, வேகமுள்ள ஆனைக் கல்லைச் சுத்தி செய்து, சீனம், முப்பு, வெடியுப்பு, சூடம், பச்சை கற்பூரம், 2 பங்கு அண்டச் சுன்னம், காந்தம், முத்து சிப்பி பத்து பங்கு, எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்துக் கொண்டு, 2 சாண் நீளமுள்ள குழியில் புடமிட,

சுன்னமாம். நாதமான பூநீற்றால், சுன்னவேகம் ஆனது. பீங்கானில் வைத்துச் சீனாக்காரம், பழச்சாறு, மோர் சேர்த்திட ஒன்றாக பூரம் (வைப்பு) கிடைக்கும்.

மேற்படி சுன்னத்தை, வழலைச் சுன்னம் செய்ய, இதனுடன் சீனாக் காரம், நவச்சாரம் சேர்க்க, நீறாகிப் போகும். வாசனையுள்ள சூடனை, தீயால் எரித்து, காய்ச்சிக் கல்லானை ஓட்டுக்குள் வைத்து, கைமுறையாய் ஊதிட சுன்னமாகும். இதனைப் பீங்கானில் வைத்து, இந்துப்பைச் சேர்த்து, வடிக்கவும் இது சுன்னமாகும். வழலையானது ஓடும் பாம்பு போலாகும். இதுவே பூரணந்தான். முப்பு தனியாக, குரு என்று காரசாரத்துக்கு முதன்மையாய் இருக்கும்.

குருவான செயநீரால் செய்யும் சுன்னம் ஏராளம் ஆகும். செய்யப் படும் செந்தூரங்கள் ஏராளம் ஆகும். கட்டுகள் ஏராளம் ஆகும். களங்குகள் ஏராளமான வகைகள் உள்ளன. குருவான நீறால் செய்யப் படும் செயநீர் ஏராளம். குறிப்பாக சாரணையால் ஆன குளிகை, குருவால் செய்யப்படும் சுத்தி முறைகள் சுருக்கு முறைகள் எல்லாம், வழலையால் ஆகும்.

## வழலை கட்டு முறை

**பாடல் 35:**

தானென்ற உப்பாலே இத்தனையு மாச்சு
தனிப்பூரச் சுன்னத்தா லாட லாச்சு
ஏனென்று பேசுமிது வழலை யப்பா
ஏகாங்கி யாய்க்குகையில் இருக்க வேண்டும்
பானென்ற தடங்காட்டில் சரக்கெல் லாந்தான்
படுமுன்னே கொன்றுவிடும் பாவி யுப்பு
நான்என்ற அகம்பிடித்தால் தெறித்துப் போகும்
நட்ட ரச எனன்ன என்று பேறாதே

**பாடல் 36:**

ஊன்னென்ற வஸ்துவப்பா வழலைச் சுன்னம்
ஓகோகோ நீறானால் பூர ணந்தான்
தேனென்ற மனோன்மணியா ளன்ற நாதம்
செப்பரிது செப்பரிது வழலை யுப்புத்
தீனென்ற வழலையிலே வீரங் கூட்டி
திடமாகத் துருசுகாட்டச் சுன்ன மாச்சு

சோனென்ற விராட்டியினை வீரஞ் சேர்த்து
கொள்கையால் மால்தேவிக் கங்கி பூட்டே.

பாட்டு 37:

பூட்டவே தாளகந்தான் சலவை யாச்சு
பொன்நிமிளை அதினாலே சுன்ன மாச்சு
ஆட்டுவது நவச்சாரஞ் சுன்ன மாச்சு
அப்பனே சாரத்தால் துருசு நீறாகும்
கூட்டுவது சிங்கியப்பா குளிகை யாகும்
கோவாத சூதமது தங்கத் தாட்டு
ஊட்டினா லஞ்சுசுன்னக் குகையி லிட்டு
ஓகோகோ சுன்னமது மலைப்பொன் னாமே.

பாட்டு 38:

ஆமப்பா சுன்னமெல்லாம் தனியே வேதை
ஆகாச உப்பாலே இத்தனையு மாச்சு
நாமப்பா கண்டபடி சொன்னோம் கேளு
நலம்பெரிய வழலையுப்பு கார சாரம்
வாமப்பா பூசையிட சித்த னாவான்
வழலையுப்பு அறியாட்டால் வாதி யாகான்
சாமப்பா சரக்கெல்லாம் கட்டு முன்னே
தனியான வழலையினா எல்லாந் தானே.

பாட்டு 39:

எல்லாருங் காணாத முப்பு வப்பா
இருதயத்தில் உப்புஅறியார் மூட வாதி
சொல்லார்கள் பெரியோர்கள் மதயா னைக்கு
சுகமாகச் சகடுவைத்து ஏறு தற்கு
நல்லதொரு குருச் சொல்லாக காண வேணும்
இல்லாட்டால் நாய்போல அலைய வேணும்
வல்லமையால் முடியாது வழலை யுப்பு
மகத்தான காரமிது சாரந் தானே.

பாடல் 40:

சாரமென்ற ஆகாச சரக்க தாகும்
தனிப்பிறவி அடிமூலம் பூமி நாதம்
வீரமென்ற முப்புவா லானைக் கலச்சாம்
வேதாந்தத் துள்ளிருக்கும் ரவியு மிந்து
காரமென்ற சுன்னமப்பா சிப்பிச் சுன்னம்
கடுஞ்சார மூரசாரம் பூமி நாதம்
பூரமென்றுஞ் சொல்வதற்குப் பெரியோர் சொல்லார்
புகழான என்நூலின் புகழைப் பாரே.

பாடல் 41:

பாரப்பா கல்லானைச் சுன்னம் வீரம்
பரிவான நவலோக பதினெட் டாகும்
சேரப்பா பூவாலே புடத்தி லேறச்
செல்லப்பா துருசுடனே வீரங் கூட்டிச்
சேரப்பா தாளகத்தைப் பொதிந்து ஊது
செப்பரிய வங்கமது சுன்ன மாகு
மாரப்பா வங்கத்தில் வீரங் கூட்டி
அப்பனே காந்தத்தைச் சரியாய் ஆட்டே.

பாடல் 42:

ஆட்டியே புடம்போட ஈய மாகு
இந்தமுறை பாஷாண ஈய மாகும்
பூட்டுவாய் தாளகமும் ஈய மாகும்
புகழ்பெரிய லோகமது ஈய மாகும்
மூட்டுவாய் மடஈயம் கல்லுப் பீயம்
முத்தியஞ் சங்கீயம் லிங்க மீயம்
பூட்டுவாய் நவச்சார ஈய மாகும்
பொன்னிமிளை ஈயம்பொன் னீயந் தானே.

பாடல் 43:

பொன்னீயம் வெள்ளியப்பா மீய மாகும்
புகழான நவலோக மீய மாகும்
வண்ணமுள்ள நவரத்தின மீய மாகும்

வாய்ந்ததொரு உப்பெல்லா மீய மாகும்
நன்னயஞ்சேர் அறுபத்து நால்ச ரக்கும்
நவரத்தின நவலோகம் பதினெட் டாகும்.
சொன்ன ஈரேழு உபரசச் சரக்காம
தொண்ணூாத்தாறு சரக்கைக் சொல்ல லாச்சே.

**பாடல் 44:**

ஆச்சப்பா உபரசத்தின் வகையைக் கேளு
அண்டமென்று பிண்டமொன்று நண்டு வண்டு
வாச்சப்பா பூனாகம் வேங்கைப் பல்
வாய்த்ததொரு கரிக்கோடு கண்ம ருங்கு
பேச்சப்பா கருங்காக்கை மண்டை யோடு
பெரியதொரு கருங்குருவி அங்கந் தோடு
வேச்சப்பா செங்கழுகு பித்து சங்கு
வினையான செம்பருந்தின் கண்ணுங் கூட்டே.

**பொருள் :**

பாடல் 35 முதல் 44 வரை 'வழலைக்கட்டு' என்ற முறை கூறப்படுகிறது.

வழலை என்ற உப்பால் எல்லாம் சுன்னமாயிற்று. ஏனென்று பேசுவது வழலையாகும். வழலையுப்பு, சரக்குகளை எல்லாம் மடியச் செய்யும். தனியாகக் குகையிலிட்டு, முறைப்படி செய்ய, உடன் மடியும், அதன் தனித்தன்மையைப் போக்கி, நிருக்கும் வன்மை உள்ளது.

வழலைச் சுன்னத்தின் மறுபெயர் 'மாமிசம்' என்பது. இது சாம்பலானால், பூரணத்துவம் பெறும். மனோன்மணியாம், பூமி பெற்ற நாதம் சொல்ல அரியதான சக்தியை, இது கொண்டது. இதனுடன் வீரம் சேர்த்து, துருசுடன் அரைக்க சுன்னமாகும். கோமய வராட்டியால் புடமிட வேண்டும். வீரம் இச்சுன்னமுடன் சேர்த்து, தாளகத்தை, கவசம் வைத்து எரித்து எடுக்க, தாளகம் வெண்மையான நிறம் பெறும்; சவர்க்காரம் போல் ஆகும். சுன்னத்தால் பொன்நிமிளை சுன்னமாகும். நவச்சாரத்தைச் சுன்ன முடன் கூட்டிக் கல்வத்திலிட்டு ஆட்ட, சுன்னமாகும். வழலையின் சாரத்தால் துருசு சுன்னமாகும். இத்துடன் மிருதா சிங்கியைச் சேர்க்க, மாத்திரையாகும். ரசத்தை தங்கும்படி சுன்னமுடன் கல்வத்திலிட்டு ஆட்டி, எடுத்து, பஞ்ச சுன்ன குகையிலிட்டு எரிக்க, மலைக்கச் செய்யும் பொன் கிடைக்கும்.

சுன்னம் எல்லாம், தனித்தனியாகச் சரக்குகளுடன் சேர்ந்து, மாறிப் போகும். ஆகாச உப்பு என்ற வழலையால், இது உண்டாகும் வழலையைப் பற்றி நூலில் உள்ளதைச் சொன்னோம். வழலையுப்பை, முறைப்படி, காரசாரமுடன் பூசை செய்ய, சித்தனாவான். வழலையை, அறியாதவன் ரசவாதி ஆக மாட்டான், வழலைக்கு, எல்லாச் சரக்குகளும், கட்டுப்பட்டு, நிற்கும்.

எல்லா ரசவாதிகளுக்கும், இதுபற்றித் தெரியாது. இதயத்தில் முப்பை பற்றி அறிந்து கொள்ளாதவன், மூடனான வாதியாவான். மூடர்களுக்கு, ரசவாதம் பற்றிப் பெரியோர்கள், சொல்ல மாட்டார்கள். யானைமேல், படி வைத்து ஏறுவதுபோல், நல்ல குருவானவர், ரசவாதம் பற்றிய முறைகளைச் சொல்லுவார்கள். இவ்வாறு நேர் பயிற்சி பெறாதவர்கள், நாய் போல் அலைவார்கள். தன்புத்தியால், வழலையைப்பற்றி அறியமுடியாது மகத்தான காரசாரம் வழலையுப்பு ஆகும்.

சாரம் என்பது ஆகாயக் கூறு. காரம் என்பது சிப்பியின் சுன்னம். கடுஞ்சாரம் சூரச்சாரம், பூமிநாதம் என்று பூரத்திற்கு மாறுபெயர்களைச் சொல்லுவார்கள். புகழ் பெற்ற என் வழி முறைகளைச் செய்து பார்க்கவும். கல்லானைச் சுன்னம், வீரம், ஒன்பது உலோக வகைகள், வழலையுப்புடன் சேர்த்துப் புடமிட பற்ப, செந்தூரம் என்று பதினெட்டு வகைகள் ஆகும். துருசு, வீரம், வழலையுடன் அரைத்து, தாளகத்தைப் பொதித்துக் குகையி விட்டு ஊதி எரிக்கச் சுன்னமாகும் வங்கத்தில் வீரம் சேர்த்து, சரிளடை காந்தம் எடுத்துக் கொண்டு வழலையுடன் கல்வத்திலிட்டு, அரைத்துப் புடமிட பாடாண ஈயம் கிடைக்கும். இதே வழியில், தாளக ஈயம் கிடைக்கும். கல்லுப்பு, முத்து, சங்கு, லிங்கம் என்பனவும் ஈயமாகும். பொன், பொன் நிமிளை, மஞ்சள் நிற ஈயமாகும். பொன் வெள்ளி என்பனவும் ஈயமாகும். ஒன்பது வகை, உலோகமும் 64 பாடாணமும், ஒன்பது மணி களும், ஒன்பது உலோக வகைகளும் ஈயமாகும். உபரசத்தில் 96 சரக்கு களை 14 வகையான மேற்சொன்ன ஈயமானது மாற்றும்.

உபரசத்தில் முட்டை, குங்கிலியம், (பூனை, வெண்) நண்டு, வண்டு, பூநாகம், புலிப் பல், யானைத்தந்தம், கருங்காக்கை, மண்டை ஓடு; கருங்குருவி, செங்கழுகு பித்து, செம்பருந்து கண், இவற்றுடன் (பூநீற்று) வழலைசேர்த்துச் செய்ய ஈயம் கிடைக்கும்.

## சாரணை அண்டம்

**பாடல் 45:**

கூ .... .... து சாரணையின் வகையைக் கேளு
கூறான தொண்ணூற்றாறு வகையும் கொண்டு
ஆட்டுவது முன்சொன்ன வங்கச் சுன்ன
அழகான வீரமிட்டு வெவ்வே றாட்டி

சாட்டுவது வில்லைதட்டிச் சவ்வாது பூசித்
தான்உருக்க ஈயமப்பா தொண்ணூற் றாறு
மூட்டுவார் ரசம்கட்டிக் குளிகை செய்து
முக்யமுடன் சாரணைக்கு வகை சொல்வேன்.

**பாடல் 46:**

சொல்லக்கேள் மஞ்சாடி பன்னி ரண்டு
சூதமது உருக்கயிலே சொல்லி யாடு
அல்லக்கேள் தொண்ணூற்றாறு சரக்கீ யத்தை
அழகாய்த் தொண்ணூற்றாறு மாவுங் கூட்டி
வல்லமையாய் உருக்கிஎடு குளிகை யாகும்
மகத்தான சாரணையின் வகையாய் அப்பா
செல்லப்பா சாரணையைச் சென்று பாரு
சென்றவுடன் குளிகைஇது கௌன மாமே.

**பொருள்:**

பாடல் 45,46இல் 'சாரணை அண்டம்' பற்றிக் கூறப்பட்டுள்ளது. உபரசம் 96 சரக்குகளைக் கொண்டு வங்கச் சுன்னத்தில் ஆட்டி, வீரம் சேர்த்தரைத்து வில்லை தட்டி, சவ்வாது தடவி, உருக்க, ஈயமாகும். 96 வகை உபரச ஈயத்தைக் கட்டியாக்கி, குளிகை செய்து, பார்க்கவும். சாரணை செய்யும் வகையைக் கேட்கவும், ரசத்தை 12 மஞ்சாடி அளவுக்கு எடுத்து உருக்க வேண்டும். இத்துடன் 96 சரக்குகளுக்கு உண்டான முன் சொன்ன 14 வகை ஈயத்தை இத்துடன் கூட்டி (96 மா) வன்மையுள்ள தீயால் உருக்கி, எடுத்து வைக்க, மாத்திரையாகும். இதுவே சாரணை அண்டமாகும்.

**விளக்கம்:**

96 மா என்பது என்ன அளவு என்பதும் 96 உபரசத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பும் இன்னதென்று விளங்கவில்லை.

## அஞ்சுன்ன வகை

**பாடல் 47:**

ஆமப்பா வழலையொன்று அண்ட மாறு
ஆட்டிவில்லை ரவிகண்டா ஊதிப் போடு

யாமப்பா வழலையொன்று சிப்பி ஆறு
அந்தவகை யாகலே ஊதிப் போடு
யாமப்பா வழலையொன்று நண்டு ஆறு
அதிகமாக ஊதிவர, சுன்ன மாகும்
யாமப்பா வழலையொன்று நத்தை ஆறு
ஆட்டவே சுன்னவகை செய்திட நானே.

**பாடல் 48:**

தானென்ற காய்ச்சன்ன ஆறுங் கூட்டி
சமனாக அஞ்சுசுன்ன விதமும் சேர்த்து
வானென்ற வெண்கருவைத் தண்ணீ ராக்கி
வன்மையுட னஞ்சு சுன்ன வகையு மாட்டி
ஏனென்ற குகை பிடித்து வைத்துக் கொண்டு
எடுத்ததொரு சுன்னமெல்லா இதிலே ஊது
நாகத்தின் எட்டுவகை சொல்லக் கேளு.

**பொருள்:**

வழலை 1 பங்கு அண்டம் 6 ஆட்டி, வில்லையைச் சூரிய புடத்தில் வைத்து எடுக்கவும். வழலை 1 பங்கு சிப்பி 6 பங்கு, சூரிய புடத்தில் வைத்து எடுத்து வைக்கவும். வழலை 1 பங்கு, நண்டு 6 பங்கு, வழலை 1 பங்கு நத்தை 6 பங்கு இப்படியே செய்யவும். பின்பு 6 வகையையும் கூட்டிச் சமனாக, வெண் கருவை விட்டுக் கல்வத்தில் அரைத்து, உலர்த்தி, சுன்ன குகையில் ஊதி எடுக்கவும். இதைப்பற்றி, என் போல் வேறு யாரும் சொல்ல மாட்டார்கள்.

## நாகக்கட்டு

**பாடல் 49:**

கேளப்பா சுன்னத்தின் திராவகத்தில் நீதான்
கிருபையுள்ள நவச்சாரந் தன்னை ஆட்டி.
ஏழப்பா நாள்மட்டு மாட்டிச் சென்றால்
எடுத்ததொடு சாரமதை வில்லை தட்டிச்
சூலப்பா ஓட்டிவைத்துப் புடத்தைப் போடு
சொல்லரிது சாரமது கட்டிப் போச்சு

வாளப்பா பீங்கானில் நீர்தா னாச்சு
மகத்தான நாகமதை உருக்கிச் சாயே.

பாடல் 50:

காயப்பா அஞ்சுதரம் சாய்க்க வேதான்
தட்டுண்டு போச்சுதப்பா நாகம் கட்டி.
நேயப்பா செந்தூர திராவ கந்தான்
நீதியுட னேகனுக்குத் தாக்கும் போது
வாயப்பா மலர்ந்துதான் முருக்கம் பூபோல்
வளமான செந்தூர மாகும் பாரு
நீயப்பா லோகம் கழஞ்சில் ஒன்றில்
நிசமாக மஞ்சாடி எடுக்க மாற்றே.

பாடல் 51:

மாற்றெட்டு கண்டதெப்பா சீனாக் காரம்
வளமான சாரநீர் குத்தி யாடு
சாற்றெட்டு நான்குத்திச் சென்று தானால்
தட்டுண்டு சீனந்தான் கட்டிப் போனான்
போற்றிட்டேன் வேதைமுறை வகையைக் கேளு
புகழ்சாரம் கட்டினது கார முந்தான்
நீர்த்திட்ட சரியெடையாய்க் கார சாரம்
நேராக முப்பூவைக் கூட்டி வையே.

பாடல் 52:

வையப்பா பச்சைநவச் சாரம் கூட்டி
வைக்கவே மகத்தான செயநீ ராகும்.
மெய்யப்பா அறுபத்து நாலு பேரு
இந்நீர் தன்னாலே மெழுகு மாகும்.
செய்யப்பா நவலோகம் வேதை யாகும்.
திடமான தூபமுதல் பரிச மாகும்.
தெய்யப்பா சத்தமுமாம் கனமு மாகும்.
தோன்றுவது பதினாறு மாற்றுக் காணோ:

**பொருள்:**

சுன்னத்துடன், நவச்சாரத்தை ஏழு நாட்கள் தொடர்ந்து ஆட்டி, எடுக்கவும். பின்னர் வில்லைதட்டி, புடத்தில் வைக்கவேண்டும். நவச்சாரம் கட்டியாகும். பீங்கானில் தண்ணீர்விட்டு, நாகத்தை உருக்கி, 5 தரம் சாய்த்து எடுக்கக் கட்டியாகும். திராவகத்தைச் சுறுக்குக் கொடுத்து எடுக்க, நாகம், முருக்கமலர் என செந்தூரமாகும். மேற்படி உலோகம் கழஞ்சுக்கு மஞ்சாடி மாற்றாகக் கிடைக்கும்.

சீனாக்காரம், இம்முறையில் செய்ய எட்டு மாற்று கிடைக்கும். செயநீரில் சேர்த்து அரைத்து, ஆட்டி எடுக்க, கட்டியாகும். சீனாக்காரம் மாற்றும் முறையை போற்றுகின்றேன். காரம், சாரம் கட்டியாகும். இக்கட்டியை, நீர்க்கவைத்து, நேர் எடையாய் முப்பூவைச் சேர்த்துக்கொள்ளவும். பச்சையான (தூய்மையற்ற) நவச்சாரத்தைச் சேர்க்க, செயநீராகும். 64 வகைச் சரக்குகளான பாடாண வகைகள், இதன் மூலம் மெழுகு ஆகும். நவலோகம் உருகி, ஓடித் தனித்தன்மையை இழக்கும். சூடம் தூய்மை யடையும். ஏழுவகையான உலோக வகைகளும், கனமாகி 14 மாற்று உள்ள பொன்னாகும்.

**விளக்கம்:**

(சாரம் என்பது எது என்பது விளங்கவில்லை. நவச்சாரத்தை பின்னர் கூறி உள்ளதால், சாரம் என்று முடியும், சவர்க்காரம் போன்று ஏதாவது உப்பாக இருக்கலாம்.

**பாடல் 53:**

காணப்பா சரக்குவகை அறுபத்து நாலும்
கைமுறையாய் மெழுகான செயநீர் தன்னால்
தானப்பா எடைசரியாய் நிறுத்துக் கொண்டு
தனித்தனியே மெழுகாக்கிக் கழஞ்சு வீதம்
பூணப்பா வில்லைதட்டிக் கலத்தி விட்டுப்
புதுமையாய் பாதாளந் தன்னில் வைத்து
யானப்பா பீங்கானி விறக்கி அத்தை
அனல்வாட்ட மாறியபின் எடுத்துப் பாரே.

**பாடல் 54:**

எடுத்தபின்பு நிறுத்துப்பார் எடைசரியாய்க் காணும்
மேகாந்தத் தயிலமிது யாரும் செய்யார்
தொடுத்ததொரு காரியங்க ளெல்லாம் வெல்லும்

சொல்லுதற்கு வேதையிது மலைப்பொன் னாகும்.
அடுத்ததொரு பிழைகளில்லை பயமு மில்லை.
அருத்தினால் கோடி ரிஷிகளாலும்
தடுப்பதொரு சாபமில்லை சூலஞ் சங்கால்
சர்ப்பத்தால் பயமுமில்லை தயிலங் கொள்ளே.

**பொருள்:**

கைமுறையாம் 64 வகை பாடாண சரக்குகளை மெழுகு, செயநீர் என்பனவாகச் செய்யும் முறையைக் கேட்பாயாக. இவற்றைச் சரி எடை. நிறுத்துக் கொண்டு, மெழுகாக்கிக் கழஞ்சு எடை வில்லை தட்டிக் கொண்டு பூமிபுடம் வைத்து, தீயால் எரிக்க, பீங்கானில் நீர் போன்று உருகிச் சேரும். எடுத்துக் கொண்டு, நிறுத்துப் பார்க்க, எடை சமனாக இருக்கும். இதுவே மேகாந்தத் தைலம் எனப்படும். இது வேதையாகும். மலையையும் உருக்கிப் பொன்னாக்க வல்லது. இதனைச் செய்ய, எவ்விதமான சாபங்கள், (சர்ப்ப பயம்—இன்னதென்று புரியவில்லை) இல்லை. பிழைகள் வராது. தயிலம் செய்யவும்.

## வல்லாரை கற்பம்

**பாடல் 55:**

கொள்ளப்பா மண்டலந்தான் நாலு வீதம்
கொண்டாக்கால் சிவனவனாய்க் கூட்டி வாழ்வான்.
கொள்ளப்பா கற்பமது கொண்டா யானால்
கோடியுகம் சொல்லினமோ சாவே இல்லை
கொள்ளப்பா கற்பவகை நூற்றெட் டுத்தான்
கொண்டாக்கால் அவன்யோகி அவனே ஞானி
கொள்ளப்பா மறுகற்பம் கொண்டு பாரே.

**பொருள்:**

வல்லாரையைக் கற்பவிதியாய் நாலு மண்டலம் உண்ண வேண்டும். பரமசிவன் போல, வாழ்நாளைப் பெறுவான். கோடியுகம் சென்றாலும், அழியாமல் உயிர் வாழ்வான். கற்பவகைகள் 108 உண்டு. இவற்றை உண்ண, யோகி, ஞானி ஆவான். வல்லாரையைக் கற்பமாக உட்கொண்டு, மறுகற்பம் வரை பொறுத்து, அதன் பலனைப் பார்க்கவும்.

## கந்தகக்கட்டு

**பாடல் 56:**

பாரப்பா வழலையிலே வீரங் கூட்டிப்
பண்பாகக் கெந்தகத்து அங்கி பூட்டி
நேரப்பா கட்டுவனத் திராவகத்தைக் குத்தி
நிசமாகத் தீயாட்டத் தந்தம் போலக் கட்டும்
சேரப்பா மெழுகுவகை திராவகத்தி லாட்ட
சணத்திலே மெழுகாகும் செம்பில் வேதை
பாரப்பா இதுமாற்று பதிமூன் றாகும்.

**பாடல் 57:**

தானென்ற பாஷாணந் தன்னைக் கட்ட
தாரணியில் வாதிகளே அறியப் பெறார்
பானென்ற கம்பியுப்பை அறைபாய்க் கொண்டு
மையளவு மத்தாலே மூடிச் சென்று
நானென்று முன்சொன்ன படியே நீற்றா
விஷயத்தி லில்லாத கட்ட தாகும்
மேனென்ற யீரஞ்சு திரெம் நீற்றி
எடுக்கவே பணம்பாஷா ணங்கள் தானே.

**பொருள் :**

பாடல் 56, 57இல் கட்டுவகைகளைப் பற்றிக் கூறுகின்றார். வழலையுடன் வீரம் சேர்த்து, கந்தகத்தைக் கவசமாக்கி, அதில் மேற்படி பொடியையிட்டு, திராவகத்தை இட, தந்தம் போலக்கட்டும். இது கந்தகக்கட்டு.

மெழுகாக மாற்ற, திராவகத்தில் இடவேண்டும். உடன் மெழுகாக, சரக்குகள் ஆகும். செம்பில் வேதையை உண்டாக்க, இத் திராவகத்தில் இட வேண்டும். 13 மாற்று உள்ள தங்கம் உண்டாகும். களிம்புள்ள செம்புக்குப் பணம் என்று பெயர் உண்டாகும், பொன்னாக்குவதால் சிலேடையாக, பணம் என்பது பாடாணம் ஆகும் என்ற மாயா வாதத்தையும் சுவையாகக் கூறுகின்றார்.

பாடாணம் கட்ட, உலகிலுள்ள ரசவாதிகள் அறியார்கள். கம்பியுப்பை அரைத்து, மத்தால் மூடி, முன் சொன்னபடி நீற்ற, 'கட்டு'

கிடைக்கும். திராவகத்தின் அளவு 10 கிராம். ஒரு இடப்பட்ட பாடாணத்திற்கு ஒரு பண எடை, 'கட்டு' கிடைக்கும்.

## பாடாணக்கட்டு கோசம்

**பாடல் 58:**

பாடாணங் கட்டினதை எடுத்துக் கொண்டு
பண்பான செந்தூரத் திராவ கத்தால்
கூசாமல் சுருக்கிடவே செந்து ரந்தான்
கொண்டதிலே ரசத்தைமெல்லக் கொடுத்துத் தாக்கு
பூசவே வேதையிது தயிலங் காட்டப்
பசும் பொன் பூட்டி ஆட்டு
நேசமுட வைலோகம் நிசமா ஆடும்
நீதியுள்ள பாஷாணப் போக்கு தானே.

**பாடல் 59:**

தானென்ற மூலமதை அறிய வேணும்
சகடுவைக்கும் கல்லானை, காண வேணும்
வானென்ற பூரணத்தை அறிய வேணும்
வளமான அட்டசித்தி காண வேணும்
நானென்ற கோசமது பீச மாகும்
நல்வினையின் பிறப்பதற்கு மதுபா லப்பா
ஏனென்று பேசுதற்குப்பஞ்ச மித்திரம்
எழுபிறப்புக் கல்லானைக் கென்றே வாறே.

**பாடல் 60:**

வாறான சுக்கிலத்தைக் காண மாட்டார்
மாடுபோல நீரைவிடக் காண்பார் மாண்பர்
தேனான வண்ணானை அறிய மாட்டார்
சிதறியபூக் குருஎனவே சென்று பார்ப்பார்
ஆறான மித்திரமப்பா சத்தி யாகும்
அடங்காத நீலியப்பா அடியைப் பாரு
பேரான பூரணியா மனோன்ம ணித்தாய்
பெற்றிந்த நாதமிது தேன்போ லாமே.

**பாடல் 61:**

தேன்மொழியாள் பூரணத்தி உயர்வேறித்
தேரோட்டம் போலவெண் சூதந் தன்னைத்
தான் மொழியக் கைமுறையாய்ச் சரக்கெல் லாந்தான்
தட்டுண்டு போச்சுதப்பா ரசங்க ளெல்லாம்
வான்மொழிய பிறந்தவளோ லோகத் தாட்டு
மடக்குவழி ஆயிரந்தான் சொல் லாகும்
மென்மொழிவ தினிச்சரக்கைக் கொல்லும்
மென்பதடியில் மடக்க ரசம் பொன்னாமே

**பாடல் 62:**

பொன்னடியின் வழலையிலே சேர்ந்து தன்னால்
பூரணமும் கூட்டியதி லேறித் தானால்
சொன்னபயன், தவறுண்டோ வேதை போக்கு
சொல்பெரிய நாதவித்தை அறியார் மூடர்
கன்னிவித்தை செய்தாலும் பூரணத்தி லேறி
கட்டானால் எவ்வளவு கட்டு மப்பா
பின்னுவித்தை யாயிருந்தா ஒன்று மில்லை
பேயாடிப் பிணமாடிப் போன தொப்பே.

**பாடல் 63:**

பிணமாடி போன்றொருக்கு அறியாமாட்டை போலொத்த
புத்திக்காரனுக்குத் தெரிய, தெய்வம்
பணமாடி போன்றதொக்கும் குருவிலா சீடன்
பாதையது அறிந்தவனே ஞான வாதி
சணமாடி போவதொக்கும் கற்றறிந்த மட்டை
சகதியிலே கல்லெறிந்த வாழ்க்கை யாகு
மனமாடி, போனதொக்கும் கிழமையுள் ஞான
மதியமுற்றாங் கொண்டவனே ஞானி யாமே.

**பாடல் 64:**

ஆமப்பா வழலைநிறம் புறப்பத் தாது
ஆதியென்ற இடமெல்லா இப்படியே ஆகும்
வாமப்பா வழலைகண்டா அவனே வாதி
மானித்து யோகயப்பா சேதி வேறே

காமப்பால் குடித்த வெறிநிலைப் பாகும்
காணப்பா வெடியுப்புச் சூட னப்பா
நாமப்பா வென்றி ருந்தாயனல்
நாயகி நாயனார் காண லாச்சே

**பொருள்:**

பாடல் 58 முதல் 64 பாடல்கள் வரை பாடாணக் கட்டுகோசம் என்பதாகக் காணப்படுகின்றது. பாடாணக்கட்டியை எடுத்துக்கொண்டு, செந்தூர திராவகத்தில், கறுக்கி எடுத்துக்கொண்டு, அரைத்துக்கொள்ள, பாடாணச் செந்தூரம் கிடைக்கும். அச்செந்தூரத்தில், ரசத்தை மெல்ல ஊற்றி அரைத்துக்கொள்ளவும். பின்னர், பூநீறு கலந்து, கல்வத்திலாட்ட பொன் கிடைக்கும். உண்மை தவறாமல் பாடாணத்தின் போக்கு இதுவாகும்.

தான் என்ற மூலத்தை அறிதல் வேண்டும். யானைக்கல்பற்றி தெரிந்து கொள்ளவும். பூரணம் என்ற நூலை படித்து, அதன்படி செய்தல்வேண்டும். அட்டாங்க முறைகளைத் தெரிந்து கொண்டு இருத்தல் வேண்டும். இவற்றால், பொன்தேடி, ரசவாதம் செய்ய பலிக்கும். இது நற்செயலால் பிறப்பது. இதனைப் பேசுவதற்கு ஐவகை பிரிவு, ஏழுவகை பிறப்பால் அறியமுடியும். இரசத்தைப் பற்றி ஒன்றும் தெரிந்திருக்க மாட்டார். பூநீறு, சவர்க்காரம் என்பன காணமாட்டார்கள். ஆறுவகையான வகை, சத்தியுப்பு, ரசவாதத்தில் பயன்படாவிட்டால், நீலிவேர் சாறு கொண்டு செய்யவும். மனோன்மணித்தாயின் நாதம், பூநீறு. அவள் அனைத்தையும் தரும் பரிபூரணி. அந்த நாதம் தேன் போல் அடையாய் இருக்கும்.

பூநீறு, வெண்சூதம், பாடாணச்சரக்குகளை, கைமுறையாய் உலோகமுடன், ஆட்பு, மடக்கி, பூரணம் என்ற நூலின்படி செய்ய, சரக்குகள் உருமாறும். இப்படி 80 தடவைகள் கையாள, ரசம் பொன்னாய் மாறும்.

**பாடல் 65:**

ஆச்சப்பா இத்தனையும் தண்ணீர்க் கூறு
அப்பனே சூடன்மணி ஆட்டக் கேளு
நீச்சப்பா வெள்ளமென்ற வகார தோஷம்
நெடியகம்பி வெடியுப்பிற் பிறவி யப்பா
வாச்சதொரு சூடனைத்தான் கட்டக் கேளு
வழலையுப்புச் சுன்ன முட
பாச்சப்பா கண்டாசுன்ன நவச்சாரங் கூட்டி
பனியின் வைக்க பீங்கானில் நீருண் டாமே.

**பாடல் 66:**

உண்டுகொள்ளு தண்ணியிலே துவைத்துப் போ
ஒன்பது நாள் குத்தியபின் ஊதிப் போடு
மீண்டுமொரு சுண்ணாம்பாய்ப் போகு மப்பா
மகத்தான சுன்னமுடன் சவ்வாது கூட்டிக்
கொண்டுமெள்ளக் குடக்கரியி லுருக்கி வாரு
கூடாட்டால் கெந்திதனைத் தாக்கிப் போடு
விண்டுபெண்டு தனைக்கொடுக்க ரசத்தைத் தாக்கிடு
வதையுள்ள செந்தூரம் களங்காமே.

**பாடல் 67:**

களங்கமற்ற களங்கஞ் செம்பாயிரத்தில் கட்டி
இட்ட செந்தூரம் ஒரு மாற்றுக்கு
வழங்குவதற்குப் பொன்னாகும் நோயிலாச்
செம்பொன் பார்த்து பத்தாயிருக்கும் களங்க வேதை
இளங்குமரிச் சாற்றாலே மடலை, யாட்டி
இருண்டஉமிக் காந்தலிலே புதைத்துப் பின்
பழம்புளியின் பதம்போல எடுத்துக் கொண்டு
பாங்கான செயநீரில் துவைத்து வாட்டே.

**பாடல் 68:**

வாட்டியபின் குழைந்துதான் மெழுகு தாக்க
மகத்தான ரசவீரங் கூட்டிக் கொண்டு
ஆட்டியே மஞ்சாடி உண்டை செய்து
அப்பனே ஒருஉண்டை புகைக்க வேதை
பாட்டமாய் புகைபட்ட வீதி எல்லாம்
பசும்பொன்னும் தூமமிது பழிக்கப் போமோ
நாட்டமா இவ்வேதை யாகு மாகும்
நாதமிது கண்டவனே வாதி யாமே.

**பாடல் 69:**

வாதிஎன்றால் யோகமே இருக்க வேண்டும்
மனோன்மணியை எந்நாளும் தியானம் வேனும்
நீதியுடன் ரோசத்தைத் தள்ள வேனும்

நிலையற்ற சித்தின்பம் நிகழ வேணும்
சூதனையாய்ப் போசனைதைத் தள்ள வேணும்
தன்னிலே மதியமுதம் கொள்ள வேணும்
மாதிசிதம் பரபூசை செய்ய வேணும்
அப்போது நந்திவந்து அழசொல் வாரே.

**பாடல் 70:**

சொன்னதென்ன உப்பு மூணு மப்பா
துடியான மேகத்தின் நீரா லாச்சு
கொள்ளதொரு நீரப்பா மித்திர மாச்சு
கோவிலுக்குள் கல்லானைக் கொம்பா லாச்சு
வெல்லுதற்குப் பிண்டத்தில் வேற லாச்சு
வேதாந்த வெடிச்சத்தங் கண்ட லாச்சு
வில்வந்த மானபூ வாத்தா லாச்சி
மடங்காத பேரெல்லா மடிந்து போச்சே.

**பாடல் 71:**

மடிந்த இந்து, தனை எடுத்து ஆட வேணும்
இல்லாட்டா மாடுபோலத் திரிய வேணும்
சொடிந்துவிடும் காய்ச்சலப்பா அறிய வேணும்
கட்டாட்டால் வாகினிபோல் கதற வேணும்
வெடிந்திரலி உதிர்ந்தபின் பெருக்கு டந்தான்
மேவியே கூவுமப்பா அறிந்து பாரே.

**பாடல் 72:**

அறிந்திந்த நூல்பார்த்து வேதை பாரு
அல்லாட்டில் சித்தரிட ஞானியிடஞ் சேரு
செறிந்தல்லோ கல்லையிட்டுக் களிபோ லாச்சு
செயநீரின் மித்திரத்தா இத்தனையு மாச்சு
பிரிந்து ஒரு, சரக்குகளை, எடை யிட்டால்
பேயைப்போல் பிடித்ததப்பா கட்டிக் கொண்டு
கொடிமுடியாய் பாம்புதனைக் கூறு வோமே.

பாடல் 73:

கூறுகின்ற பாம்புதனை எண்ணை வாங்கக்
    கொடியதொரு கல்லானை வீரச் சுன்னம்
தேறுகின்ற வழலைதன்னைத் தணலில் வாட்ட
    சேந்தங்கே எண்ணெயெல்லாம் வடிந்து போகும்
ஊறுகின்ற உப்புச் சுன்னம் கண்டா சுன்னம்
    ஓகோகோ வீரச்சுன்னம் பழத்தா லாட்டி
வீறுபெற்ற பாம்புதனைக் கலசங் கூட்டி
    விளக்கிலே வாட்ட எண்ணெ யெல்லாம் போமே.

பாடல் 74:

எண்ணெயெல்லாம் போனபின்பு வழலை, வேகம்
    இணங்காத பாமப்பா சரக்கெல்லாஞ் சாம
வண்ணமுள்ள வழலையிலே வீரங் கூட்டி
    வளமாகத் துருசுக்குக் கவசம் கட்டி
எண்ணருடன் ஊதிவரச் சுன்ன மாகும்
    இதனாலே தாளகந்தான் சலவை யாச்சு
உண்ணப்பா பொன்நிமிளை நீறிப் போகும்
    உத்தமனே நிமளையுடன் வீரங் கூட்டே.

பாடல் 75:

கூட்டியே வங்கத்தி லப்பி ஊது
    கொடியதொரு சுண்ணாம்பாங் கண்டிக் கப்பி
ஆட்டுவாங் கண்டருடன் வீரங் கூட்டி
    அரிதோபிச அங்கியிட ஊதிப் போடு
தீட்டியதோர் தாளகத்தை கெந்திக் கப்பி
    நிசமாக அஞ்சு சுண்ணக் குகைக்கு ஊது
வேட்டங்கி வேகமங்கிச் சுன்ன மாச்சு
    தீருமதாய்ச் சுண்ணாம்பாம் வீரங் கூட்டே.

பாடல் 76:

வீரமிட்டுத் துருசுக்குக் கலசங் கட்டி
    வெந்தெடுக்கப் பச்சையில்லா சுன்ன மாச்சு
வீரமிட்டுக் கறியுப்பு அங்கி பூட்டி

விளக்கிலே ஆட்டையிலே மெழுகு தாகும்
காரமிட்டு வைத்துச் சுன்னக் குகையி லூது
கடுங்கார சுண்ணாம்பாம் வீரங் காட்டு
பூரத்தில் பொதிந்து சுண்ணாம் பாகும்
புகழ்பெறவே கல்நாரு கப்பிப் போடே.

பாடல் 77:

போட்டெடுக்கச் சுன்னத்தில் வீரங் கூட்டி
பொன்நிமிளைக் கப்பியே ஊதிப் போடு
ஆட்டெடுத்து வங்கத்துக் கப்பி ஊது
ஆனதொரு தளவாயதாஞ் சுன்ன மாகும்
நீட்டெடுத்த ரோகமப்பா நீறிப் போகும்
நிசமான நாகமது சுன்ன மாகும்
மூட்டெடுத்த தங்கமது நீறிப் போகும்
முனையான பரிமேலே ஏறிச் செல்லே.

பாடல் 78:

செல்லப்பா வீரத்தைக் கூட்டிக் கொண்டு
திடமான தங்கத்துக் கங்கி பூட்டிச்
சொல்லப்பா பஞ்சசுன்னக் குகையி லூது
கூகூகூ தங்கமது சுன்ன மாச்சே
கல்லப்பா மண்ணப்பா மலைதா னப்பா
காலென்ன மரமென்ன சுன்னக் காடே.

பாடல் 79:

காடெல்லாந் திரிந்தலைந்து சுட்டா லென்ன
கரிசுட்டுப் போவதுவே காண்பார் மாண்பர்
நாடெல்லாம் பொன்மயமே ஆக்கிப் போகும்
நடமாடும் துரிசந்தச் சுன்னந் தன்னே
ஆடலாஞ் சிங்கியாயச் சேத்துப் போடே
அடங்காத குருவப்பா துருசு சுன்னம்
கோடெய்லா மலையெல்லா மரங்க ளெல்லாம்
கோடிமுடியாம் பசும்பொன்னாங், கூட்டிப் பாரே.

பாடல் 80:

பாரப்பா இந்தப் பிறவி கேளு
பாரிலே பதினாறு முழத்தின் கீழே
நீரப்பா கசிந்தெடுத்து மேலே உன்னி
நிசமாகப் பனிக்காலம் மேல்கொள் வார்கள்
ஆரப்பா இவர்பெருமை அறியப் போறார்
அடங்காத மனோன்மணியா ஈன்ற நாதம்
பேரப்பா வகைகேளு சொல்வேன் சொல்வேன்
போகாதே பித்தோடே இந்தின் ராவே.

பாடல் 81:

இந்தென்றும் பூவென்றும் கால்தான் என்றும்
இணையான அடியென்றும் மூல மென்றும்
சந்திரனுப் பெற்றும்பேர் சுரோணி தந்தான்
தருவழலை என்றும்பேர் பூமி நாதம்
சுத்தியால் சுட்டதென்றும் பூமி நாதம்
சுத்தியால் சுட்டதென்று மறைந்தா னென்றும்
தொலையாத நீரழிக்கும் முப்பு தென்றும்
வந்ததொரு சத்தியென்றும் கண்ணியென்றும்
மனோன்மணித் தாயென்றும் கண்டு கொள்ளே.

பாடல் 82:

கண்டுகொள்ளும் சிவமதனைக் காண மாட்டார்
கன்னிக்குத் தானெடுக்க வாழ்வார் கேளு
பண்டுடனே இவர்பெயரு ரவிதா னென்றும்
பரவுமென்றும் வழலையென்றும் பச்சை யென்றும்
தொண்டுடையார் முடியென்றுங் கல்லுப் பென்றும்
சுத்தரவி யால்விளைந்த நிலவுப் பென்றும்
முண்டிடவே விந்தென்றும் பொருள் தன்றும்
முத்தசிலக் கூறலின்பே ராகுந் தானே.

பாடல் 83:

காணாத பொருளொன்று சொல்லக் கேளும்
கமல சத்த சாகரமு உண்டு விட்டே

நீநாத தண்டாலே கீழே விட்டே
    நீமோக உப்பரைத்து நீர தாச்சு
நாநாத தண்ணீரை இரைத்துப் பாய்ச்சி
    நாட்டுள்ளோர் கொண்ட ஒருருசியு மாச்சு
மானான தண்டாலே நீர் பாய்ச்சு
    அடங்காத சிவகெங்கை என்ற பேரே.

**பாடல் 84:**

என்றதொரு நீற்றாலே சரக்கெல் லாஞ்சாம்
    ஏகாந்த உப்பதப்பா சத்தி—
வென்றதொரு நீரப்பா வருணன் பிள்ளை
    மேலெழுந்த ரவிதனக்கு சத்தி போச்சு
நன்றான தனமென்ற நீரே சிக்கி
    வாதிரச வாதடுதில் பாடும் சூதங் கட்டும்
குன்றான கெந்தகத்தைக் கொல்லும் கொல்லும்
    குடிகெடுத்த சத்தியுடன் கூடும் போதே.

**பாடல் 85:**

போத மென்ற தாக நீரல்லால் மற்றும்
    பொறியில்லை அத்தியில்லை சிவமு மில்லை
வாதமென்று காண்பதற்கு நீரைச் சேரு
    வகையுடனே கைமுறையாய் நீரைச் சேரு
நீதமென்ற நீராலே களிச்சுன் றைந்தான்
    நிலைத்துதப்பா வென்றாலே வாதந் தங்கும்
சூதமென்ற சூதமுடன் உப்புத் தொட்டு
    தொட்ட சரக்கெல்லாம் செத்துப்போமே

**பாடல் 86:**

போமப்பா இந்தவழி அறிய வேணும்
    இல்லாவிட்டால் புலையனைப்போல் திரிய வேணும்
வேமப்பா சரக்கெல்லாம் வேகா மல்தான்
    வேறேயொரு வழியாகச் சொல்லக் கேளு
காமப்பால் மிஞ்சினதாய்க் கழுதைச் சென்ம
    கனதேசி நீராலே சரக் கெல்லாம் கட்டும்
மேமப்பா சுறுக்குண் டென்றால்
    வெளிதல்லா தேசியுட சாறு தானே.

**பொருள்:**

இத்தனையும் தண்ணீரின் பங்காகும். சூடனை, மணியாக்க, வழியை அறிவாயாக. வகாரதோஷம் வெள்ளம் என்ற ஆகாயமாகும். நீண்ட கம்பி யுப்பு, வெடியுப்பின், பிறப்பானானதாகும். சூடனைக்கட்டும் வழியைக் கேட்பாயாக. வழலை உப்பின் சுன்னமுடன், கண்டா சுன்னம், நவச்சாரம் சேர்த்து, பனிப்புடம் வைக்க, பீங்கானில் நீர் சேரும்.

வழலையை, கொள்ளுநீரில் காய்ச்சித் துவைத்து, எடுத்து, ஒன்பது நாள் காய வைத்து, உலையிலிட்டு ஊத, சுன்னமாகும். இத்துடன் சவ்வாது சேர்த்து, கரியிட்டு, உருக்கி, வார்க்கவும். உருகாவிட்டால், கந்தகத்தைச் சேர்த்துக் கொண்டு, செய்யவும். ரசத்தையும் சேர்த்து அரைத்து உருக்கவும்; செந்தூரமானது கட்டியான 'களங்கு' ஆகும்.

களங்கமில்லாத, களங்கு செம்பால்கட்டி, செய்த செந்தூரம் ஒரு மாற்றான பொன்னாகும். நோயில்லாமல் செய்யக் கொடுக்கவும். செம்பொன் செய்யப் பற்றாகஉள்ள களங்க வேதையை இளமையான கற்றாழைச் சாற்றில் ஆட்டி, உமிக்காந்தலில் புதைத்து பின் பழம் புளியின் பதத்துக்கு எடுத்துக் கொண்டு, ஏற்றதொரு செயநீரில் துவைத்திட்டு ஆட்டவேண்டும். இது குழைந்து மெழுகுபோலாகும். ரசம், வீரம் சேர்த்துக் கொண்டு, மஞ்சாடி அளவு உண்டை செய்து, எரித்தல் வேண்டும். வேதையானது எங்கும் பரவும். பசும் பொன் தரும் புகை இது. இதைப் பழிக்கக்கூடாது. நாட்டமிக்க இவ்வேதை ஆகும். நாதம் தன்னைக் கண்டவன் ரசவாதியாவான்.

ரசவாதிக்கு நல்வினை இருத்தல் வேண்டும். மனோன்மணியைத் தினமும் பூசை செய்ய வேண்டும். நீதியுடன் மோசத்தை விட வேண்டும். அட்டமா சித்தியை எண்ணாது, மாசித்தியை எண்ண வேண்டும். மதிய முதத்தைச் சமாதியிலிருந்து கொண்டு குடித்தல் வேண்டும். சிதம்பர பூசை செய்தல் வேண்டும். இவற்றைக் கடைபிடித்தல் வேண்டும். இவற்றைச் செய்தால் சித்தர்களின் தலைவனான நந்தியின் அருளைப் பெறமுடியும்.

## ரசம்

சொன்னது 3 வகை உப்புகள். துடியான மேகநீரால் ஒன்று செயநீர் சரக்குகளைப் பிரிப்பதால் உண்டானது. ஏனைய மறை மொழியில் சொல்லு கிறார். அவற்றை அறிய முடியவில்லை. ரசத்தை மடித்துக் கெட்டியாக்கி, வைத்துக்கொண்டு சித்தாடுதல் வேண்டும். ரசவாதி இல்லாவிடில் மாடு போல அலைவான். உப்புக்காய்ச்சலை அறிதல் வேண்டும். உப்புக்கட்டை அறியவில்லை என்றால் மேகம் போன்று அழவேண்டும் சித்தரசவாத நூல் களை அறிந்து கொண்டு ரசவாதம் செய்யவும். சித்தர், ஞானிகளிடம் சீடனாய், சேர்ந்து அறிந்து கொள்ளவும். செயநீரால் கல், களியாய்

ஆகும். செயநீரின் தன்மையால் இத்தனையும் ஆனது பேய் போல் ஒன்றாகக் கட்டிக் கொண்டது. எல்லாச் சரக்குகளும் மடியச் செய்தால் பாம்பு (நாகம்) பற்றிச் சொல்லுகின்றேன்.

## நாக எண்ணெய்

நாக எண்ணெய் வாங்க, கல்யானை, வீரச்சுன்மை வழலை, இவற்றைச் சேர்த்து, தணலில் வாட்ட, எண்ணெய் வடிந்து போகும். ஊறுகின்ற உப்புச் சுன்னம், கண்டா சுன்னம், வீரச் சுன்னம் இவற்றை எலுமிச்சம் ரசத்திலாட்டி, நாகத்திற்கு கவசம் கட்டி, விளக்கில் வாட்ட எண்ணெய் கிடைக்கும்.

## வழலைச் சுன்னம்

எண்ணெய் இறங்கினபின் வழலை வேகம், ஓடாத பாம்புக்கு ஒக்கும். சரக்கை எல்லாம், சாம்பல் நிற வழலையில் வீரம் சேர்த்து துருசுக்குக் கவசமிட்டு, உலையில் இட்டு ஊத சுன்னமாகும். இச்சுன்னத் தால் தாளகம் வெண்மையாகும். பொன்நிமிளை உருகி, நிற்றுப்போகும்.

## பலவித சுன்னங்கள்

நிமிளையுடன் வீரம் சேர்த்து, வங்கத்தலைப்பி, உலையிலிட்டு ஊதவும். ஊதியபின், சுண்ணாம்பை அப்பி, கண்டச் சுன்னம், வீரம் சேர்த்து, கவசம் செய்து, உலையில் ஊத வேண்டும். நீண்ட தாளகக் கட்டியை, கெந்தகதிலப்பி அஞ்சு சுண்ண குகையில் வைத்து ஊத வேண்டும். வீரமுடன் துருசு சேர்த்துக் கவசம் கட்டி அனலில் சுட்டெடுக்க சுன்னமாம். வீரம், கறியுப்பு, கவசமிட்டு, விளக்கு ஒளியில் காட்டி அரைக்க மெழுகு கிடைக்கும். வெங்காரம் (படிக்காரம், சவுக்காரம்) வைத்து, மெழுகுடன் சுன்ன குகையில் ஊத, கடுங்கார சுன்னமாகும்.

வீரம், பூரத்தில் வைத்து, அரைத்துக் கவசம் செய்து, உலையிலிட்டு ஊத, சுன்னமாகும். கல்நாருடன் வீரம் சேர்த்து, இதுபோல் செய்ய சுன்ன மாகும்.

சுண்ணமுடன், வீரம், பொன்நிமிளை அப்பி ஊதியிடவும். சுன்ன முடன் வங்கத்துக்கு அப்பி, ஊத, சுன்னமாகும். உலோகங்களின் நீரில் போகும் நாகமானது சுன்னமாகும். தங்கம் வெளுத்துப்போகும். குதிரையில் ஏறிச்செல்ல முடியும். சுன்னமுடன் வீரத்தைச் சேர்த்துத் தங்கத்துக்குக் கவசம் செய்து, அஞ்சு குகையில் வைத்து, ஊத தங்கம் சுன்னமாகும். எல்லா வகையான உலோகங்களும் சுன்னமாகும்.

ரசவாதம் செய்து, கரியைச் சுட்டுச் சாம்பலாவதாகப் பார்ப்பார்கள் நாடு எல்லாம் பொன்னாக ஆகும். மிருதாசிங்கி, துருசு சுன்னம், குரு இவற்றால் ரசவாதம் செய்ய, குன்று, மலை, மரங்கள் கொடுமுடிகள் எல்லாம் பசும் பொன்னாகும்.

## பூநீறு

14 முழத்திற்குக் கீழே, நீர் கசிய வடித்துப் பார்த்து, பனிப்புடம் வைக்கவும்; பனிக்காலம் முழுவதும் இதுவே மனோன்மணி நாதம். இதன் வகைகளைக் கூறுவேன் கேட்பாயாக. இந்து, பூநீறு, கால் இணையடி மூலம், சந்திரனுப்பு, சுரோணிதம், வழலை, சுந்தியால் சுட்டது, பூமி நாதம், முப்பு, சத்தி, கண்ணி, மனோன்மணித்தாய் என்றும் வேறு பெயர்கள் உண்டு.

## சிவன்—வேறு பெயர்

சிவனைக் காண முடியாது. பூநீறு எடுக்க, பொன் செய்து வாழ்வார்கள். முன்னாளின் இவர் பெயர் ரவி, பரம், வழலை, பச்சை, தொண்டுடையார் முடி கல்லுப்பு, நில உப்பு, விந்து; பொருள் இது என்று கூறுவார்கள்.

## பொருளை அறியவில்லை என்று

காணமுடியாதது என்று சொல்லக்கேள்; ஏழு கடலையும் உண்டு. அதனை பின் வெளிவிட்டது குறுமுனி நாதத்தின் தண்டால் நாதமாம் நீரை இறைத்துப் பாத்தி கட்டி, நாட்டு மக்கள் உண்ண, உப்பானது ருசியாய் இருக்கும். மான் என்ற தண்டால்நீர் பாய்ச்ச, அந்நீரானது சிவகங்கை ஆகும்.

செயநீரால் சரக்குகள் எல்லாம் மடிந்து போகும். தனியான உப்பு சத்தி இது பின்னை. சூரியனால் சுத்தியாகும். பொருள் என்ற நீர் ரசவாதி கட்கு ஆகும். ரசம் கட்டும் மலையான கந்தகம், இதில் மடியும். உருகும். சத்தியுப்புடன் இணைந்து நிற்கும்.

பொறியில்லை, சிவமில்லை, சத்தியில்லை. போதம் என்ற நீர் இல்லாமல் எதுவும் இல்லை. ரசவாதம் செய்ய, நீரைப்பெறவேண்டும். கைமுறையாய் வந்த செய்முறையைப் பின்பற்று. களி சுன்னத்தால் நிலைத்து, வாதம் தங்கும். சூதம் என்ற ரசமுடன் உப்பு என்ற காரம் சேர்த்துச் செய்ய எல்லாச் சரக்குகளும் ஒன்றாக ஆகும்.

இம்முறையை அறிந்து செய்தல்வேண்டும். இல்லை என்றால் அலைதல் வேண்டும். கை பொருள்போய், சரக்குகள் எல்லாம் தக்கபடி,

கலக்காமல் போய், வேகாமல் ஆகும். கழுதைக்குக் காமப்பால் (விந்து) அதிகம். அதன் சிறுநீரால் சரக்குகள் கட்டும். கழுதை சிறுநீரால், சுறுக்குக் கொடுக்க விதிகள் என்ன என்பதை அறியவும்.

(பாடல்கள், உரையுடன்)

*பகுதி I – முற்றும்*



**பாகம் II**

# பொது விளக்கம்

## அக. குணவாகடத்திரட்டு

ஆதியாம் பூமிநாத மதை ஐந்து சுத்தி செய்து
வேதியாம் பழத்தின் சாறும் விட்டவைத்து உலர்த்திக் கொண்டு
சாதியாம் ஓட்டில் வைத்துத் தணலிடு கோழியாக
வாதியாம் பெயரீர் கேளீர் வடித்திடு எண்ணெய்தானே.

## முப்பு

1. தானென்ற பூமி நாதம் சகலமும் கட்டும் பாரு
வானென்ற விந்து ஒன்று வளர்வெடி யுப்பு நான்கு
ஊனென்ற சிவம் கொண்டு ஒன்றாகக் கூட்டி கல்வம்
கானென்ற சிமிட்டுப் பாலும் கருவுமே விட்டு ஆட்டே.

2. ஆட்டியே வில்லை செய்து அகலமா ஓட்டில் வைத்துச்
சூட்டிலே காயப் போடு சுருக்கெனக் கனீவிட் டக்கால்
மாட்டியே குக்கு டத்தில் வளமுட னாறி வாங்கி
பூட்டியே எடுத்துப் பாரு புகழ்முப்பூச் சுண்ண மாச்சே.

3. ஆச்சப்பா வீரம் பூரம் அறைந்திடு சரக்கை யெல்லாம்
மூச்சப்பா வோடொட் டாமல் முக்கியமா அடக்குஞ் சொன்னேன்
வாச்சப்பா சுண்ணஞ் செயநீர் வளமுள்ள செந்தூ ரங்கள்
காச்சப்பா நீறு மூலி கட்டுக் கட்டிதான் காணே.

## அகத்தியர் 100-ல்

| I காரசாரம் | | II சீவவகுப்பு |
|---|---|---|
| வழலை | மால்தேவி | முத்துச்சிப்பி |
| கம்பிஉப்பு | (தாளகம்) | அண்டம் |

**I காரசாரம்**

கல்லுப்பு
விந்து
சூடம்
ரவி
வெடியுப்பு
சுண்ணாம்புக்கல்
துருசு
பூநீறு
சீனாக்காரம்
கந்தகம்
நிலவுப்பு
கறியுப்பு
நவச்சாரம்
மிருதாசிங்கி

**II சீவவகுப்பு**

நண்டு
வண்டு
கருங்காக்கை
(அண்டங்காக்கை)
கருங்குருவி
செங்கழுகு
செம்பருந்து

III (Stable Elements) **உலோகம்,**

**அணிநிறை**

பொன் 197.2
வங்கம் 207.21
வெள்ளி 107.880
காந்தம்
வெள்வங்கம்
நாகம்

சாரணை
வல்லாரை

IV **பஞ்சசூதம்,**

**அணிநிறை**

ரசம் 200.61
வீரம்
பூரம்
லிங்கம்
(ரச) கற்பூரம்

V **தாவரம்**

கற்பவகை 108
பழச்சாறு (எலுமிச்சம்)

## வைத்தியர் லட்சணம்

கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, உடல் 8, கால்கள் 10.

1) **கண்கள் 3** : 1) மருந்து 2) சுத்தி 3) அதன் தன்மை

2) **தலைகள் 4** : 1) வாத 2) பித்த 3) ஐய 4) முக்குற்றம்

3) **முகங்கள் 5** : பிண்டத்துடன் கூடிய சடப்பொருள்களை உணர்தல்

4) **கால்கள் 10** : தச நாடிகளை, தச வாயுக்களைப் பார்த்தலால் கால்கள் 10.

5) **கைகள் 6** : அறு சுவைகள் கைகள்

6) **எட்டு உடல்** : அட்டவிதமான குறிகளை அறிதல்.

**உபரசம் 120-ல் கூறப்படும் கல்**

| | |
|---|---|
| 1) கருங்கல் | 9) குருந்தக்கல் |
| 2) செங்கல் | 10) மஞ்சள் கல் |
| 3) சுக்கான் கல் | 11) தவளக் கல் |
| 4) ஈரக்கல் | 12) சிட்டக்கல் |
| 5) சூடாலைக்கல் | 13) வெள்ளைக்கல் |
| 6) நீலாஞ்சனக்கல் | 14) சுக்கான் கல் |
| 7) மாக்கல் | 15) மாந்தளிர் கல் |
| 8) தேக்கல் | 16) படிக்கல் |

சித்த மருத்துவ பால பாட போதம்— Dr. **முத்து கருப்ப பிள்ளை**

# ஆக்க வினைகளுக்கு அணுசக்தி

***சி. ஜெயபாரதன் பி. இ. (ஆனர்ஸ்)***

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை 1.

பக் 6: ரசவாதம்:-

பக் 46 The Sceptical Chemist — 1661 — Robert Boyle —
(சுயரசவாதம்) (நம்பாத ரசாயன வாதிகள்)

Decan Elemuts — சுயரசவாதம் — கன மூலகங்கள்
விஞ்ஞான ரசவாதம் — ருதர் போர்டு

25 மில்லியன் டிரான்வோல்ட் (25,000,000 E.U)

1. மூலஎண் (Atomic Number)
2. கருஎண் (Nucleon Number) (or) Mass Number
3. அணுநிறை (Atomic Weight)
4. மூலகத்தின் பெயர் — Name of the Element

திடப்பொருள் — Solid matter
திரவப்பொருள் — Liquid matter
வாயுப்பொருள் — Gaseous matter

"அந்தக் காலத்தில் இருந்த ரசவாதிகளுக்குப் பல்லாயிரக் கணக்கான டிகிரி உஷ்ணத்தைத் தரக்கூடிய எரிபொருள் எதுவும் இல்லை. சாதாரண விறகுகளையும், கரியையும் கொண்டு தீ மூட்டி, செம்பு, பித்தளை இவற்றோடு ஏதோ சில மூலிகைகளையும் சேர்த்துச் சூடாக்கி, தங்கமாக மாற்ற முயன்று தோல்வி அடைந்தார்கள். காரணம் வெப்பம் போதாமையே. அவர்கள் உண்டாக்கிய நெருப்பில் அணுக்கள் இணையவே முடியாது.

## பரமணுக்கள்

| | | |
|---|---|---|
| Electron | இரண்டாவது | எலக்ட்ரான் |
| Proton | மூன்றாவது | ப்ரோட்ரான் |
| Neutron | முதல் | நியூட்ரான் |

## மூலகங்களின் விளக்கம்

| மூல எண் | மூலகப் பெயர் | கரு எண் | குறியீடு | அணுநிறை | கண்டு பிடித்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 16. | கந்தகம் | 32 | S | 32.066 | |
| 26. | இரும்பு | 56 | FE | 55.85 | |
| 29. | தாமிரம் | 63 | CU | 6354 | |
| 30. | துத்தம் | 64 | ZN | 65.38 | 1746 |
| 79. | தங்கம் | 197 | AU | 197.0 | |
| 80. | ரசம் | 201 | HG | 200.61 | |
| 82. | ஈயம் | 207 | Pb | 207.21 | |

எட்டு அணு—1 தேர்த்துகள்
எட்டு தேர்த்துகள் — 1 இம்மி
எட்டு இம்மி — 1 எள்
எட்டு எள் — 1 நெல்
எட்டு நெல் — 1 பெருவிரல்
} பழைய முறை

ஆயுள் வேத காலம் கி.மு. 800

மத்திய காலம் கி.பி. 800-1100

தந்திர காலம் 1100-1300

ஆராய்ச்சி காலம் 1300-1550

P.C. ராய் & காசு பிள்ளை

| உப்புச்சுவை | | புளிச்சுவை |
|---|---|---|
| 1. | வெடியுப்பு | பழக்காரம் |
| 2. | கல்லுப்பு | பழம்புளி |
| 3. | சூடன் | துருசு |
| 4. | கடல்நுரை | கற்சுண்ண நீர் |
| 5. | சூதம் | கந்தகம் |
| 6. | காந்தம் | காடி |
| 7. | அயம் | எலுமிச்சம்பழச்சாறு |

| | | |
|---|---|---|
| 8. | தொட்டி | புளியரணை |
| 9. | வீரம் | புளியாரை |
| 10. | கௌரி | புளிமாங்காய் |
| 11. | வெள்ளைப்பாடாணம் | பணங்கள் |
| 12. | வைக்கிராந்தம் | நிமிளை |
| 13. | தங்கம் | சிலை |
| 14. | நாகம் | வீரம் |
| 15. | சாரம் | வெண்காரம் |
| 16. | பச்சைக்கற்பூரம் | இந்துப்பு |

உப்பை புளிச்சரக்காலும், புளிச்சரக்கை உப்புச் சரக்காலும் கட்டி, நீருக்க மாற்றலாம்.

பக். 26 (சித்தமருத்துவப்பாட போதம் முத்து கருப்ப பிள்ளை)

## நாதவிந்து சரக்கு

| நாத சரக்கு | விந்து சரக்கு |
|---|---|
| 1. இலிங்கம் | 1. கல்லுப்பு |
| 2. நிமிளை | 2. வெள்ளை |
| 3. கந்தகம் | 3. இரசம் |
| 4. பூநாகம் | 4. வீரம் |
| 5. பூநீறு | 5. சூடன் |
| 6. அயம் | 6. எவாச்சாரம் |
| 7. காந்தம் | 7. கல்மதம் |
| 8. செம்பு | 8. சிலாசத்து |
| 9. நாக வங்கம் | 9. பூரம் |

இவைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து நட்புக் கொள்ளும்.
(பக்.227–பாலபாட போதம்)

## கட்டுவகைகள் செய்ய

பாடாணம், இலிங்கம், தாளகம், ரசம், கந்தகம், கௌரி, நவச்சாரம், வெடியுப்பு, சீனம், விரம், பூரம் என்பனவற்றைத் தீயிலிட்டு உருக்கினால் புகையால் உருகவேண்டும்.

நாகம், வெள்ளீயம், காரீயம் இவைகள், உருக்கு முகத்தில் புகையாமல் உருகி, ஆடவேண்டும்.

கறியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு போன்ற உப்புகளின் கட்டுகள் உருக்கினால் வெடிக்காமல், எரிந்து போகாமல் உருகி, மணியாக நிற்பது சரியானதாகும்.

(பக். 228-பாலபாட போதம்)

### சித்த மருத்துவ பஞ்சபூத வகுப்பு

வாதத்தில் வெடியுப்பும் பஞ்ச பூதம்
வன்மையாகும் சவுக்காரம் பஞ்ச பூதம்
தீதற்ற செயநீரும் பஞ்ச பூதம்
செயமான குருவுக்கும் பஞ்ச பூதம்
கோதற்ற சடத்துக்கும் பஞ்ச பூதம்
குறியாகப் பழுப்பதற்கும் பஞ்ச பூதம்
காதற்ற களங்குக்கும் பஞ்ச பூதம்
காரியமெல்லாம் வாதமெல்லாம் அஞ்சு தானே

(பக். 204)

கார சாரம் என்பதில் காரம் சிவமாகவும் சாரம் சத்தியாகவும் இருந்து செயல்படுவதாக சித்தாந்தம்.

### யாகோபு – வாத காவியம் 300

வகையான ரசவாதம் எளிதோ அல்ல
வந்திட்டால் குபேரனவன் வாரா விட்டால்
மிகையான மிடியன்என்று சொல்லு'வார்கள்
மென்மேலும் பழிப்பார்கள் தோசி யப்பா
பகையாகப் பேசிடுவார் உலக மாடு
பார்க்கறியா நிர்மூடர் பழிகா ரர்தான்
திகையா திகைப்பார்கள் உலக வாதி
தேத்தினார் யாகோபு திறமை தானே.

### அக. பரிபூரணம் 400

பக் 5. K.A முதலியார் சென்னை 1966.

### நூல் விபரம்

''கேளப்பா மூன்றுலட்சம் காப்பு சொன்னேன்
கிருபையுள்ள வாதமது லட்சம் காப்பு

கூளப்பா வயித்தியத்திலிரண்டு லட்சம் சொன்னேன்
அவற்றைக் குறுக்கியிரு காண்டம் சொன்னேன்
பாரப்பா அதைக் குறுக்கிப் பாதியாக
பாடினேன் அறுநூறு நாலுஞ் சொன்னேன்
கேளப்பா திராவகம் எண்ணூறும் சொன்னேன்
வேதைமுறை யைந்நூறில் வெளியிட் டேனே''

## A HISTORY OF HINDU CHEMISTORY

*By P.C. Raz Vol I & II*

Chucheuvertty Chatterjee & Co Ltd

15, College square, Calcutta. 1902

They have a science similar to alchemy which is quite Peculiar to them. They call it 'Rasayana'; a word composed with Rasa i.e. gold. It mean a art which is restricted to certain operations, drugs and compound medicines most of which are talen from Plants."

"In India however, these ends have played a secondary part in promoting a knowledge of chemical processes."

"We have been fortumate enough to procure a transcript of it from Ragunatha temple liberary kashmir, and another from the ori-Mss. library Madras."

### (அக. பரிபூரணம்) நூல்விபரம்

பக் 5 (தொடர்ச்சி)

1. வெளியிட்டேன் ஐம்பதிலே மூன்றும் சொன்னேன்
விபரமாய் முன்னூற்றிற் செந்தூரம் சொன்னேன்
வழியாக எண்பதில் முப்பூவுஞ் சொன்னேன்
வயித்தியந் தானாயிரத்தைந் நூறுஞ் சொன்னேன்
அழியாத முன்னூறில் கர்மதர்மம்
அன்பாகச் சொன்னதை நீ அறிந்து பாரு
முழியாதே நானூற்றிலிரண்டு சொன்னேன்
முடிவதோர் தீற்றிமைாம் நாலு நூறே.

2. நானூற்றில் வயித்தியமும் பூரணமுந் தோன்றும்
நாடியுடன் குருநாடி நன்றாய்த் தோன்றப்
பாலான முப்பாறு நன்றாய்த் தோன்றப்
பாடினேன் வயித்திய பூரணமாமிதப்பா
தேடினால் கிடையாதிவ் வுலகத் துள்ளே
சிவயோகி வைத்திருப்பார் கொடுக்க மாட்டார்
நாளாக அவர்களிடத் தொண்டு செய்து
நன்மையுடன் நூல்வாங்கி நாட்டம் பாரே

## அக. பரிபூரணம்—முப்பூ பெயர்கள்

பக்.30

வேங்கைஎன்ற முப்புவின் பேர்தான் கேளு
வெறித்தசிங்கம் பேரண்டம் வெள்ளாங் கோரை
தாங்கைஎன்று சிறுநாகம் பட்சி ராசன்
சாக்கண செந்துவிற்குக் காலன் காலன்
பாங்கைஎல்லாங் கண்டவனே வாத ஞானி
பதிவான வண்டமடா ஆதி யுப்பு
ஓங்கிஎன்ற சத்தியுப்பு வழலையுப்பாம்
ஒண்மையுள்ள நாதஉப்பை உகந்து கேளே

பொருள்:

முப்புவின் பெயர், சிங்கம், பேரண்டம், வெள்ளைச் சாரை, தாங்கை, சிறுநாகம்பட்டி ராகன், காலன், அண்டம், ஆதியுப்பு, சத்தியுப்பு, வாலையுப்பு.

## நாத உப்பின் பெயர்

1. ‘‘உகந்து நின்ற வாதமடா வாலை வாலை
ஓங்கார றீங்கார ஒருமைப் பிள்ளை
செகந்தனிலே திருவென்றும் செந்தீ என்றும்
திகட்டான தீட்டென்றும் செல்வி என்றும்
அகந்தனிலே அமிர்தம் என்றும் செந்தேன் என்றும்
அன்பான விஷமென்றும் பேச்சி என்றும்
முகந்தனிலே சிந்தூர திலத மென்று
மோனமுள்ள வாலையடா சக்தி கேளே’’.

2. சக்திஎன்ற உப்பினுட பேரே தென்றால்
தயங்காத துருசைஎன்றும் கார மென்றும்
சித்தான கெந்தமென்று மண்தா னென்றும்
சிவசிதா வன்மையத் தனமென்றும்
உத்தியென்ற பராசக்தி பெருமைக் காரி
ஒடுங்காத வாசமுள்ள வியோம சித்தி
கற்றாலு மனம்பதறும் கைகால் கூசும்
கருணையுள்ள சக்தியைநீ கண்டாற் றானே".

பொருள்:

நாத உப்பின் பெயர்—வாலை, ஓங்காரம், ரீங்காரம், பெருமைப் பிள்ளை, திரு, செந்தீ, திட்டு, செல்லி, அமிர்தம், செந்தேன், விஷம், பேச்சி, சிந்தூரம், திலர்தம், உப்பின் பெயர், துருசுக்காரம், கெந்தகம் மண், உண்மயம், பராசக்தி, பெருமைக்காரி

### சத்தியுப்பு, வழலைப் பெயர்

பக் 31

1. தானான வழலையின் பேர்தான் கேளு
கருவான அண்ட கேசரி தான் என்று
கோனான கொடிமுடியாம் பொதியி லென்றும்
குருவான பீடமென்றும் குருக்க ளென்றும்
தேனான சோதிஎன்றும் தீப மென்றும்
கண்டுபார் முப்பூவின் கருவி தாமே.

2. ஆமப்பா முப்பூவும் ஒன்றாய்க் கூடி
ஆதியிலே மும்மூர்த்தி யானார் பாரு
காமப்பால் கானற்பால் சோமப் பாலும்
கலந்துநின்ற ரவிமதியு அக்னியு மாகி
ஓமப்பா மூலமுத லாறு மாகி
உடன்சேர்ந்த பொருளதனை உற்றுப் பாரு
தாமப்பா முப்பொருளென் றிதற்குப் பேரு
தன்மையுள்ள மூலமுதன் முடிவரையு மென்னோ.

3. எண்ணவே இன்னம்வெகு பேர்க ளுண்டோ
என்மகனே புத்தியினா லறிந்து கொண்டு

சொன்னதொரு கருமான மேஎன் றாலே
சொல்லறிந்து சொல்லுகிறேன் பிண்டம் பிண்டம்
மன்னவனே பிண்டம்என்றால் மலைக்க வேண்டாம்
மந்திரக்கலை வழலைமலர் பூக்கும் காலம்
முன்னமே அக்கால மறிந்து மைந்தா
முக்திகொண்ட நாதமதில் விந்து மாச்சே''.

பொருள்:

அண்டகேசரி, கொடுமுடி, பொது குருபீடம், குருக்கள் ஜோதி, தீபம் அமிர்த ரசவாக்கியம், பூரண வழலை, மும்மூர்த்தி, காமப்பால், ரவி, மதி அக்னி முப்பொருள், ஒன்று பெயர் அவைகளே, உயிர்களுக்கு மூலாதாரம்.

அக, பரிபாஷைத் திரட்டு

ச. முனுசாமி முதலியார்

மெய்ஞ்ஞான சூரியோதயவிலாச அச்சுக்கூடம், சென்னை.
பக் ய அ

**வழலை**

1. கூறுவேன் வழலையிலே நாலு சாதி
கூசாமல் முடித்துவைத்தார் சித்தர் எல்லாம்
தேறுவாய் அந்தந்த வகையா தென்றால்
சிறுநீரால் காய்ச்சுகின்ற வழலை ஒன்று
பேறுபெறச் சுண்ணாம்பு மூவருங் கூட்டிப்
பிசகாமல் காய்ச்சுகின்ற வழலை ஒன்று
நாறுகின்ற சயந்த லவணங் கூட்டி
நலமாகக் காய்ச்சுகின்ற வழலை யொன்றே.

2. ஒன்றான களிஉவர் மண், வீரம் வெள்ளை
உள்ளபடி காய்ச்சுகின்ற வழலை யொன்றே
என்றான என்மகனே வேம்பு புன்கின்
எண்ணெயிட்டுச் செய்திடுவார் இந்த நான்கும்
நன்றேது மில்லை இந்த சவுக்கார த்து
நாட்டுக்குள் ரசவாதி சுன்னம் செய்து
குன்றாத சரக்குகளைப் பொதிந்து சுட்டு
குணமில்லா வகை கண்டு குறையா வாரே.

## அக. சாஸ்திர தொகுப்பு

1. சார்பான தென்பொதிகை தன்னி லையா
சங்கமுடன் திரேதாயி னுகத்தி லையா
தேர்போன்ற மலையினுச்சி தன்னி லப்ப
தேவேந்திர ரிடிமுனிவர் சாட்சி யாகக்
கார்வீசுங் கதிரோன் சாட்சி யாகக்
காவலனே வைத்தோர் தொகுப்பு நூல்கள்
நேர்பான காவியங்கள் ஆயி ரந்தான்
நெடிதான காப்பென்று செப்ப லாமே.

2. செப்பலாம் சூத்திரங்கள் கருக்கிடைக ளப்பா
செங்கமலக் கண்ணானே தெளிவுள் ளானே.
ஒப்பமுடன் கோர்வைகளோ எண்பது ஆயிரந்தான்
ஓகோகோ நாதாக்கள் சொன்ன தில்லை
ஒப்பமுடன் நெடுங்காலம் பாடு சென்று
நேர்மையுடன் தென்பொதிகை சமாதி கொண்டார்
தப்பிதங்கள் நேராமல் ரிஷிகள் சாட்சி
தயாபரனும் வைத்ததொரு தகைமை யாமே.
(பக். ௭௪௪; அக. 12000)

## காரசாரம்

1. பாரப்பா மூலமண்ட ரண்டம்
பரபிரம்மம் நாதவிந்து
ஆரப்பா அறிவார் களண்டக்கூறை
அமுந்துதப்பா விந்தாலனேகமாச்சு
சாரப்பா சாரசாரம் விந்து வாச்சு
சமர்த்தான சாரமது நாத மாச்சு
மாரப்பா வண்டுடோடு பிண்ட மாச்சு
மகத்தான பரபிரம்ம மதுவே யாச்சே.

2. ஆச்சப்பா அகாரமது விந்து வாச்சு
அப்பனே காரமது நாத மாச்சு
மாச்சப்பா ஓங்கவி விட்ட மாச்சு
வட்டத்தில் பரபிரம்மம் அண்டோ டாச்சு
ஓச்சப்பா ஓர் விட்ட ரிங்கார மாச்சு
ஓகோகோ ரிங்கார மிதுவே யாச்சு
பாச்சப்பா பரமண்ட கேசரிதா னாச்சு
பாலகனே கெவுனஅண்ட குளிகை யாச்சே.

3. குளிகையென்ற அண்டத்தால் பிண்ட மாச்சு
கூறுகின்றோம் மூன்றெழுத்து பொடிங்கிப் போச்சு
அளிகையென்ற வண்டமதா எல்லா மாச்சு
அப்பனே சவுக்கார மிதுவே யாச்சு
பெளிகையென்ற பேரண்ட மனித ராச்சு
பேசுகிறோம் பேரண்டம் கேசரிதா னாச்சு
மளிகையென்ற மவுனஅண்டம் நாடி லாச்சு
மைந்தனே இதுமூன்றால் வழலை யாச்சே.

4. வழலைஎன்ற மும்மூன்றோ லொன்ப தாச்சு
மகத்தான குருவருளால் பத்தாச்சு
அழலையென்ற கேசரியைத் தொட்டு
ஆடலாம் பத்துநாளும் சித்து
கழலையென்ற செவிகொண்ட புருடர்களே கேளும்
கடையில்விற்கும் மருந்ததுவால் கார சாரம்
சழலையென்ற காரமது கார சாரம்
சமர்த்தான அண்டமநா லறிந்து பாரே

(பக்.ருஅ அக. 12000)

## முப்பு அறிய

1. கேளடா புலஸ்தியனே சொல்லக் கேளீர்
கெவனமுடன் முப்பூவின் மார்க்கம் சொல்வேன்
நாளடா கதிரவனால் பூக்கும் பூவாம்
நலமான வழலையென்ற முப்பு வப்பா
கேளடா வாராமல் முப்பு தன்னைக்
குணமுடனே முடிப்பதற்குக் குறிகள் சொல்வேன்
மீளடா குருமுடிக்கும் வகையும் சொல்வேன்
மிக்கான வழலையிட மார்க்கம் பாரே.

2. மார்க்கம் முப்பூவென்றால் முறைகள் சொல்வேன்
மயங்காதே உழமண்ணு முப்பு வாமோ
தீர்க்கமுடன் மூலிகைத ளுப்பா மோசொல்
தீர்மையுள்ள சிற்றண்டம் முப்பா மோசொல்
சேர்க்கவே பேரண்டம் முப்பா மோசொல்
செம்மையுடன் சிங்கியது முப்பா மோசொல்

ஏற்கவே காரசார முப்பா மோசொல்
எழிலான சவர்க்கார முப்பா காதே.

3. ஆகாது சீனமது முப்பா மோசொல்
அண்டபிண்டஞ் சேர்ந்தாலே முப்பா மோசொல்
வேகாத சுண்ணாம்பு முப்பா மோசொல்
வெடியான மதியுப்பு முப்பா மோசொல்
சாகாத தலைப்பிண்டம் முப்பா மோசொல்
சட்டமுடன் கேசரி முப்பா மோசொல்
தாகாத வழுரியது முப்பா மோசொல்
தாரணியில் மூன்றுப்பை முப்பொண் ணாதே.

4. ஒண்ணாது முப்பினுட பெருமை சொல்வோம்
ஓகோகோ நாதாக்கள் சொல்ல வில்லை
அண்ணாந்து சாத்திரத்தை மிகவா ராய்ந்து
அலைகடலும் போய்த்திரிந்து முப்பைக் காணார்
சுண்ணாம்பி லிருக்கும் சூட்ச மம்போல்
சுடுவாதி அறியாமல் சுருண்டு போனார்
மண்ணாளும் வேந்தரேயெல் லாம்முப் பாலே
மதிமயங்கிக் கெட்டதொரு க்கதையைக் கேளு.

5. கதைஎன்றால் சத்தியிட நாத முப்பு
கவிவாணர் கட்டுவித்த வழலை முப்பு
விதையுடனே பூர்வமுப்பு சொல்வேன் பாரு
எழிலான புலஸ்தியனே செப்பக் கேளும்
பதையாமல் தலைப்பிண்டந் தன்னில் மேலே
பாங்கான தேவதா முப்பூ சொல்வேன்
சதையான மேல்வளர்ந்த முப்பூ அப்பா
தகைமையுள்ள முப்பூவின் பெருமை பாரே.

6. பாரேதான் வரனாஇம் கூறப் போமோ
பாருலகில் எவராலும் சொல்லொண் ணாது
நேரேதான் திரிமூர்த்தி இருந்த முப்பூ
நெடிதாக நடேசர்கூத் தாடு முப்பு
சீரேதான் நாதத்தால் வந்த முப்பு
செழுமையுடன் முப்பூவை என்ன சொல்வேன்

கூரேதான் வாதியிலே வந்த முப்பு
கூறுவேன் கண்மணியே புகலக் கேளே.

7. கேளேதான் லகாரத்தின் வளர்ந்த உப்பு
நெடியான மகாரத்தில் சொரிந்த உப்பு
பாளேதான் போகாத பிரம னுப்பு
பாங்கான ருத்திரனால் சமைந்த உப்பு
விளேதான் ருத்திரனால் கண்ட உப்பு
வியர்வான மூவர்களால் சமைந்த உப்பு
நாளேதான் வளர்ந்துவரும் மண்கூ றுப்பு
மகத்தான பரமனிட உப்பு மாச்சே.

8. ஆச்சப்பா தசவாய் வளர்ந்த உப்பு
அப்பனே மனோன்மணியாள் ஈன்ற உப்பு
வாச்சப்பா மணித்தாயாள் சமைந்த உப்பு
வாகான கமலமதில் வளரு முப்பு
நீச்சப்பா கோடிவரை கார மான
நெடிதான முப்பூவும் அதீத மெத்த
மாச்சலுட னிந்தஉப்பு யார்தான் காண்பார்
மகத்தான சிவயோகி காண்பான் பாரே.
(பக் ௰௨—அக. காவியம்).

## பூநீர், முப்பூ இருக்குமிடம்

1. கூறுவே இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
கொற்றவனே நாதாக்க ளாருஞ் சொல்லார்
மீறவே எனதைஅசு வனியாந் தேவர்
மிக்கான தலம்கண்டு எனக்கு ரைத்தார்
ஆறவே அடியேனும் போய்த்தி ரிந்து
அப்பனே பார்த்தவிடம் யானு ரைப்பேன்
மாறவது நேராமல் மன்னா கேளு
மார்க்கமுடன் பிரித்துரைப்பேன் புலத்தி யானே.

2. ஆனேதான் புலஸ்தியனே மச்சக் கேத்திரா
அன்பான கண்மணியே அழகுள் ளானே
சோனகர்கள் காணாத இடங்கள் எல்லாம்

சுந்தரனே யுந்தமக்கா யுரைப்பே னப்பா
தேனேகேள் சுடரொளியே சுந்தா மாறாத கிட்டாத
தெள்ள மூர்த்தனென கோவே கேள்
ஞானமெனுங் கருவிலமே நளின வானே
நண்பாக பாலகனே நவிலக் கேளே.

3. கேளப்பா மேருகிரி வடபா கத்தில்
கெடியான ஸ்தானமொன்று சுனையொன் றுண்டு
ஆளப்பா போகாத வனாந்தி ரந்தான்
அப்பனே வெளிக்காடு உட்கா டுண்டு
தேளப்பா விடகாலி யுறையும் நாடு
தேவியென்ற மனோன்மணியா ளுறையும் நாடு
சூளப்பா முப்புரமும் சாக ரங்கள்
சுந்தரனே வாள்போகா விடந்தா னுண்டோ.

4. உண்டான நாடதுவும் ஸ்ரீ ரப்பா
உத்தமனே சீனபதி யதற்கீ டில்லை.
கண்டாறும் சித்தர்முனி ரிடிகள் தேவர்
காட்டார்கள் மானிடராம் சாது கட்கு
புண்டரிக மானதொரு கிருஷ்ண பூபன்
புகழ்ந்துரைத்த நாடதுவும் பொன்னாடாகும்
எண்டிசையும் காணாத ஸ்ரீ ரப்பா
என்மகனே உந்தனுக்கா யுரைக்க லாச்சே.

5. ஆச்சப்பா மேருவுக்குத் தென்பா கத்தில்
அப்பனே குண்டுக்கல் வெள்ளைக் கல்லாம்
பூச்சக்ர பூபாலர் காணா நாடு
புகழ்பெரிய காட்டகத்தின் நேர்மை யென்ன
பாச்சலெனும் நதியுண்டு குன்று முண்டு
பாலகனே புலத்தியனே பண்புள் ளானே
மாச்சலென்ற புனலாறு உதக முண்டு
மைந்தனே இவ்விடத்தில் மகிமை தானே.

6. காணவே புல்லாறு கல்லா றுண்டு
கருவான பூமிவள மேது சொல்வேன்

ஈனவே சிங்கமது உறையும் நாடு
எழிலான காட்டின் தூங்கும் நாடு
பாணமெனும் சகோரமயிம் மான தானும்
பாங்கான காட்டாத்தில் வாசம் செய்யும்
ஆணவங்கள் கொண்டதொரு முனிவர் தானும்
அவ்வனத்தே ஏகுதற்கு அளவொண் ணாதே.

7. ஒண்ணாது பாற்றவளம் நீர்ச்சுண் ணாம்பாம்
உத்தமனே சவுட்டுப்பு மண் என்பார் ஈனர்
கண்ணான பொன்மண்ணா பூநீ ரல்லோ
காயென்பார் பூவென்பார் பிஞ்சென்பார்.
கண்ணான சேர்வளமோ சுண்ணா மென்பார்
காசினியில் காணாமல் கெட்டார் கோடி
சுண்ணமென்று மேல்மண்ணை வாரி ரில்லோ
சுந்தரனே மாளிமுதல் கட்டு வாரே.

8. கட்டுவார் பொன்மண்தான் பூநீர் என்று
காசினியில் கண்டறியார் கோடி மாண்பர்
அட்டாங்கம் தெரியாமல் அலைந்து மூடர்
அம்பலமாய் விட்டார்கள் மூடர் தாடும்
தொட்டகுறி போலாக நூல்கள் பாடித்
தோற்றமுட னுந்தன்கை கொடுத் திறுக
முட்டாளாய்ப் போனதொரு வகைதா னென்ன
மூதுலகோர் காணாமற் கேட்டார் தாமே.

9. தாமான தேசமது இன்னங் கூறுவேன்
தண்மையுள்ள புலத்தியனே தார்வேந் தேகேள்
சாமானிய மானதொரு தேச மல்ல
சார்பான பொதிகைக்குக் குணபா கத்தில்
நாமேதான் சொன்னபடி பூநீர் மார்க்கம்
நவிலுகிறோம் புலத்தியனே புண்ய பாலா
போமேதான் குணபாகம் கிழக்கி லப்பா
பொங்கமுடன் திடாகமுண்டு பொய்கை யுண்டே.

10. உண்டேதான் நிட்களமாம் பொய்கைக் கப்பால்
உத்தமனே யோசனையாம் தூர மாகும்
கண்டறியார் வெகுகோடி மாண்பு ரப்பா
கைலயங்கிரி என்பார்கள் காணார் தாமும்
தண்டகா ரணியமென்று பொன்னா டாகும்
தன்மையுள்ள ராட்சதர்கள் கூட்டத் தார்கள்
விண்டிலர்கள் கருமான முள்ள தெல்லாம்
விட்டகுறை இருந்தாலே கிட்டும் தானே.

11. தானான காடெல்லாம் மகிமை கேண்மோ
தாக்கான சினபதி மண்தா னென்பார்
கோனான எனதையா அசுவினி தேவர்
கொற்றவனார் தாமுரைத்த சுண்ணக் காடாம்
மானான பூமிவள மாதி லுந்தான்
மன்னவனே கடாரமென்ற வைப்புண்டு
பானான பரஞ்சுடருக் கொப்பே யாகும்
பளிங்கான கிடாரவைப்பு என்ன லாமே.

12. என்னவே சோதனைகண் டறியும் போது
எழிலான திராடமதி லிருந்த மார்க்கம்
துன்னவே செம்பொன்னாம் சொர்ண வைப்பு
துப்புரவாய்ச் சங்கமது கோடி பொன்னாம்
பன்னவே பதினெண்பேர் சித்தர் காணப்
பாங்கான திரவியங்கள் கணக்கோ இல்லை
நன்னயமாய்த் தேவரிடி வைத்த வைப்பு
நாமுனக்கு உரைத்திட்டோம் அன்புள் ளானே.

13. நண்பான மேருவுக்கு அடிவா ரத்தில்
நலமான உதகமொன்று தடாக மொன்று
கண்பான தடாகமதின் சுத்தி யோரம்
கருவான பூநீறு கற்சுண் ணந்தான்
திண்பான பூநீறு கார மெத்த
தீர்க்கமுள்ள கம்பியது என்ன சொல்வேன்
பண்பான பூமிவள மதற்கீ டில்லை
பாலகனே புலத்தியனே பரிவாய்க் கேளே.

14. கேளப்பா புலத்தியனே புண்ணிய மாரா
புகழான இன்னமொரு அதீதங் கேண்மோ

நாளப்பா போகாமல் நளின வாலே
நாட்டிலுள்ள நாதாக்கள் காணா தேசம்
தூளப்பா சூரியனாய் இருக்கும் நாடு
சுந்தரனே கண்டமுனி ராட்சதர்கள் கூட்டம்
தேளப்பா பூமிவள மெல்லா மப்பா
தேற்றமுடன் கற்பாறை சுண்ண மாமே.

15. சுண்ணமாம் பூண்டுமுதல் விளையா நாடு
சுந்தரனே புலத்தியனே சுகுண மாரா
நண்ணலொப்பாய் தேசமெல்லாம் கல்நா டாகும்
நாயகனே பாறைவைப்புதலாம் புயமாகும்
அண்ணலார் எனதை அரசு கவனியாந் தேவர்
அப்பனே எந்தனுக்கு உரைத்த வண்ணம்
திண்ணமுடன் லோகமெல்லாந் திரிந்து
தீர்க்கமுடன் உபதேசம் சொன்ன வாறே.
(பக். ௰௬ முதல் ௨௰ வரை. அக. 12000 காண்டம்)

## பரிபாஷை திரட்டு-மருந்தின் பெயர்

பக். ௬:

1. சங்குகண்டங் கத்திரிபொன் மத்தம் வித்து
சரபீச மகரமொடு சாளக் கிராமம்
வங்குசிங்கு புரியட்டம் பஞ்ச மித்திர
மதியிரவி சோடசமா மதனப் பூடு
குங்குமங்கோ ரோசனைகோ மயங்கு ருத்துக்
கொன்றைகொடி ரசம்பூர்ண மிராச வர்க்கம்
அங்கமுள்ள தாதுகத்த முருளை தேர்கால்
அங்கிசுன்ன முட்டை யானைக் கல்லே.

2. கல்யானை யேக, சவுக்காரம்
கருவிதொகை யான தொண்ணூற்று மாறாச்சு
சொல்லான நூற்றிருபத் தஞ்சின் பேரைச்
சொல்லுகின்றேன் புலத்தியஅத் தொகுப்பைக் கேளு
வில்லோசை யுளக்கருவஞ் சனக்கு டக்கு
விஞ்சைபக லவன்விளக்கு வேதை கஞ்சன்
புல்லான ஆமணக்கு கானல் வேனல்
புகைபருகக் காலஇருள் போகுந் தானே.

சட்டமுனி—நிகண்டு
**நாராயணசாமி முதலி**
பிரபாகர அச்சுக்கூடம்

## எண்ணெய் வாங்க

1. எட்டெட்டா மரபிலுள்ள நாதாக்கள் சொன்ன
இயல்பான வகாரத்தில் வழலை மார்க்கம்
ஒட்டொட்டாய் மறைத்துவைத்தார் வாத மூலம்
ஓகோகோ வழலையில்லா வாதம் போச்சு
நெட்டொட்டாய்ப் போகாமல் நிகண்டு சொல்வேன்
நேராக எண்ணெய்கக்க சுண்ணாம்பில் வைத்து
மட்டெட்டாய் நீர்வாரு அன்பத் தஞ்சு
வாருதிபோ லெண்ணெய்கக்கிச் சுத்தி யாமே.

## வழலையின் பெயர்

ஆகும் வழலை யாதி பிறப்புக்கேள்
பாகு நல்லூரவஷீரம் பகுந்தனற் சுன்னநீர்
வாகு கல்லுருப்ப மருவிய எண்ணெயும்
போகு ஜலத்தோடு பூதமு மைந்தே.

## காய்ச்சு வழலையின் பெயர்

வழலைக்கு நாமம் வகைவகை நூலினில்
நிழலைக் கடந்த நேரொற்ற வார்த்தைபோல்
தழலைக் கடந்த தனித்த வெறும்பூப்போல்
உழலப் படுவார் உலகத்து வாதியே.

## காரசாரம்

அமர்ந்ததோ ஆனைக்கல் அறிய மாட்டார்
அப்பனே அண்டமது அறியராமோடா
சுமந்தபிணம் போல்திரிவார் வேதை காணார்
சொல்லுகின்றேன் உப்பு....... அண்டஞ்

சரகந்த மாகையிலே போனஉயிர் மீண்டு
தானுலக நந்ீசர் இந்தமுறை அருளிச் செய்வார்
சமன் சிறு செ........ கொல்லுங் கொல்லும்
தண்டானது உப்பே சாரமாச்சே

## சட்டமுனி நிகண்டு

வழலை— 1) காய்ச்சு வழலை 2) பூவழலை 3) அமரியுப்பு

### நவச்சாரம்

1. நவசித்த சாரம் நலம்புஞ் செல கூர்மை
அவசித்த கப்பலோ வாதியா ஒன்பது
கவசித்த சூரன் கடுமேக நாதன்
நிவசித்த வாருது நேர் வாத ராசனே

2. வாத சிரோன்மணி வாகாம சுரன்தான்
போதச் செலக்குரு புகழ்வன்னித் தீயோன்
காதச் செயநீர்க் குருபுகழ் வன்னித் தீயோன்
வேதைத் துருசிக்கு மேற்குரு வாமே.

3. ஆகுமே நவச்சாரி யாதி கடுஞ்சாரி
ஓகுமே நற்சத்தி உத்தம செங்கைதாள்
தாகுமே வாதம் சமைக்கின்ற வாருதி
காகுமே காமினி கைகண்ட சாரமே.

### சீனாக்காரம்

சீனிப் படிகை சிறந்தவெண் காரிதான்
ஆணிப் பிடிச்சி அடங்காத வெள்ளச்சி
பாணிக் குருச்சி பாங்கான வெண்பீலி
காணிவெண் சுன்னத்தி கடுஞ்சீ னப்பேரே.

## வெண்காரம்

காரி பொரிக்காரி கடும்பே தகமணி
நேரி உருக்கினம் நேர்ந்த மணிகாரம்
வாரிய தூமத்தை மடக்கிய சிற்பரி
காரிய சந்தானி கரித்த குடோரியே.

## சூடன்

தீபக் கொடிச்சி சிறந்த கதலிச்சி
மாபத்த ரூபி, மகத்தான தீக்கஞ்சி
தாபச் சுடர்கொடி தனிப்பிள்ளை சூடனாம்
ஆபத்த கேசரியா லாத்தி பூரமே.

## அமுரியுப்புப் பெயர்

மூலத்தின் சாரம் முழங்கும் அமுரிதான்
கோலச் சடைநீர் குறிப்பான தீச்சலம்
ஆலச்சலக் கூர்மை ஆதியாம் வஸ்துப்பு
காலத் தனியுப்பு கடும்கூற லவணமே

## கல்லுப்பு

அறுசுவைக் காதி அடங்காத வேலைநீர்
நெறிமுனி மூத்திரம் நேரான கூர்மை
கறுதறு வாதிதான் கடலிற் குருவிகேள்
தறுகிய வாதத்தைச் சமைக்கின்ற கல்லுப்பே.

## வெடியுப்பு

பொட்டிபூ, நாதம், பொருந்தும் படைராசன்
கட்டுலைக் கம்பி, கருவாமணாங் கத்தான்
ஒட்டிலைத்தீ, சுடர்வுறு பூமி கூர்மைதான்
மட்டிலா வேதை வளர்க்கும் வெடியுப்பே.

## துருசு

1. பரசுபாணி பாங்காமனற் கண்டர்
தரிசு நலப்பாணி தனித்த சுடலையோன்
நெரிசு நன்பச்சை நிறமுற்ற நிட்களன்
அரசு கங்காள னாடிய கூத்தனே.

2. கூற்றன் கொலையோன் குணனைவில் லாக்கினோன்
மாற்றுமால் மச்சினன், மந்திரா கொங்கையோன்
காற்றன், கருமேகன், கடும்பல்லுக் கேற்றவன்
தோற்றன், குருநாதன், சொற்பெயர் குருசியே.

## கல்

1. கருங்கல் 2. நீலப்படிக்கல் 3. சுக்கான்கல் 4. சுரக்கல்
5. இரசவர்த்தம் 6. கருடக்கல் 7. ஓடு 8. செங்கல்
9. சூடாலைக்கல் 10. மாக்கல் 11. தேயிக்கல் 12. மஞ்சக்கல்
13. தவளைக்கல் 14. வெள்ளை சுக்கான் 15. சாளக்கிராமம்
16. மாந்துளிர் கல் 17. கருஞ்சுக்கான் 18. குருந்தக்கல்.

## அரிதாரம்

மாலுடன் பாக மருவிய லட்சுமி
சேலுடன் கன்னி சிறுமூக் கறச்சிதான்
ஆலுட கொடிச்சிதா னாதிதான் சுத்தி
மேலுடன் அறியின் தாரத்தின் பேருமே.

## கெந்தகம்

கந்தி பொன்வர்ணங் காரிழை நாதமாம்
அந்திலை நானும் பூவதிரச சுரோணிதம்
தந்திய சத்திதன் மாதக் குணச்சலாம்
பந்திய கெந்தகப் பரிபாஷை நாமமே.

## வெள்ளைப்பாடாணம்

வெள்ளை விடயம் மேவிய சங்கமாம்
தள்ளை விளைவளம் சமரச பாகந்தான்
உள்ளைக் குமுத மோங்கும் படித்தான்
நள்ளைய வெள்ளை பாஷாண நாமமே.

## மிருதாரசிங்கி

ரசித மிருதாரு நலங்கிய பொன்வண்ணம்
அசிதச் சிலம்பு வகரக் களங்குதான்
மசித நல்வங்க மருவிய ஈயந்தான்
கசித மிருத மிருதாரக சிங்கி நாமமே.

போகர் நிகண்டு அட்டவணை
Dr. வெங்கடராசன் மகால் வெளியீடு—1966

## பூவழலை

மூர்க்கன், தரணிநாதன், பூநீறு, பூமிநாதன், தீர்க்கன், ஓட்டச்சி, ஊசரம், வெள்ளை, பூசரம், குசத்தி, அருக்கன், வேகத்தி, பூமிருது, சவுடு, வண்ணாத்தி ஆதிமுதல், குருச்சி, உரகன், காயகல்பம்.

## இந்துப்பு

சிந்தூர்த்தம், சைந்தவம், சந்திரவுப்பு, மதிக்கூர்மை, பனிக்கூர்மை, சிலாலம், மதிப்பூரமித்துரு, பாண்டத்தில் சமைத்த உப்பு.

## சவுக்காரம்

சதாசிவம், வெண்சாரை, வண்ணான், உவர்காரம், சிற்பரை, வழலை, குருமுறை, உமையாள் ஈசன், அவகாரம் வாதஆதி, ஆகியாங் குடியானோன், கூர்மையாளன், சுவக்காரம், சோமன்ரவி, வன்னி, சுயம்பாகி, சுத்தியானோன், சூலானோன், சுடலையாடி, சிருஷ்டியாளன், வாதத்தின் தலைவன், வாத முடிப்போன், அந்தகன் காந்தள் மலர், பாதத்தோன், முத்தி, ஏமசீவன் மூர்க்கன்.

## அக. பரிபாஷை திரட்டு

### பஞ்ச சுண்ணவிவரம்

1. பகருவேன் குக்கிடத்தின் சுன்ன மொன்று
   பரிவான கற்கிளிஞ்சில் சுன்ன மொன்று
நிகரில்லா வெள்ளைக்கற் சுன்ன மொன்று
   நீரான கடனுரையின் சுன்ன மொன்று
சுகமான வலம்புரியின் சுன்ன மொன்று
   துகளிலா அஞ்சுவகை சுன்னத் தாலே
தகைபெறுசீர் நாதமதைச் சுண்ணாம் பாக்கிச்
   சாகரநா தஞ்சேர்க்கத் தண்ணீ ராமே.

2. தண்ணீராஞ் சிவகங்கை சுத்த கங்கை
   தாயான பிராணனுமே சந்திர பானம்
கண்ணீராஞ் சத்தியெனு நாதத் துள்ளே
   கலந்தபரப் பிரமவிந்து கலந்த தானால்
ஒன்றான சுக்கிலமுங் குருவு மாச்சு
   ஒகோகோ தங்கரச முதித்தம்ம
மண்ணோடு புலமுதலா வேமமர்
   மாறாம விந்திரன்போல் வாழ்வுண் டாச்சே.

### நீலஉப்பு

1. பேசுவேன் பூவென்ப தயனு மாச்சு
   பெரிதான நீரென்ப தறைமா லாச்சு
வீசுவேன் மாறானே ஈச னானான்
   வேதனெனும் பிரமனே சத்தி யானான்
ஊசரத்துக் கடுத்திருந்த உப்பே ஈசன்
   உப்புக்கு மேலிருந்த மண்ணே சத்தி
தாசியர்க்கு மண்ணன்றோ வளைய லாச்சு
   சத்தியைவிட் டகன்றஉப்பு தானே போச்சு.

2. போச்சப்பா ஈசனுப்பு தண்ணீ ராச்சு
   பூத்தசுன்னஞ் சத்தியன்றோ மண்ணே யாச்சு
தேச்சப்பா விழிகுலத்திற் பிறந்த ஈசன்
   இதனாலே சத்திக்குள் அடக்க மானான்.

வாச்சுதப்பா காறலையாய்த் தலையே காலாய்
மாறிநின்ற படியலே மறைத்தார் நூலில்
பேச்சப்பா நாதகென்று மடியா மென்றும்
பிண்டஉவர் சத்திஎன்றும் பேசி னாரே.

3. பேசாத பூவழலை பிரம கற்பம்
பிள்ளையொன்று மில்லைநில உப்பே ஈசன்
கூசாதே முடிதலையொன் றிதற்குப் பேராம்
கொண்டான்மதி யுப்பென்றும் கூற லாகும்
பூசாரம் அறியாகக்கா ஈச னுப்பு
பொருந்தாது முதல்வழலைப் பொய்யாய்ப் போகும்
ஆசாரக் கள்ளருக்குப் பேச வேண்டாம்
ஆதித்த னுப்பைஉனக் கறையக் கேளே.

## சவியுப்பு

1. அறையக்கேள் பொட்டிலுப்பு வெடியுப் பையா
வராகரா கடைசிஎன்ற வழலை யாகும்
பறியக்கேண் மண்ணெடுத்துச் சலத்தான் மூட்டிப்
பக்குவத்தி னால்பிறக்கும் கம்பி உப்பே
உறையசெந் தீக்கண்டால் பிடித்து வெந்தே
பொடிந்தக்கால் சிவமென்று முறைப்பா றையா
முறையாக்கேள் ஈசனுக்கு மரண முண்டோ
மோசமுண்டோ இணங்கன்வெகு மூர்க்க னாமே.

2. மூர்க்கமுள்ள விந்து மதியின் விந்து
மூன்றுபங்கு இரண்டுபங்கு மாகக் கூட்டித்
தீர்க்கமா இணங்கிஎனும் பெயரு மாச்சு
சிவாசிவா வெண்ணெய்குடித் திருக்கு முப்பு
மார்க்கமா அக்கினிக்கு ரோமம் போல
மாமிசத்தின் கருவைவிட்டான் மாஎா துப்பு
பார்க்கவே காலுக்கு முடியென் றேபேர்
பரிதிவிந்து மதிவிந்து பாரொன் றாச்சே.

## சவுக்காரம்

1. பாரப்பா இப்படியே சவுக்கா ரத்தைப்
பாடாமல் மறைத்தாரே வழலை மார்க்கம்
நீரப்பா நிலவுப்பே வழலைக் காதி
நின்றதினாற் றுருசைமுந்திக் கொல்லும் கொல்லும்
பேரப்பா துருசாலே சூதங் கட்டும்
பேய்மக்காள் சூதத்தால் தங்க நீறும்
தாரப்பா தங்கமிட்ட சிந்து ரத்தைத்
தாக்கினா லைஞ்சதுவும் தப்பா தன்றே.

2. தப்பாமல் வழலைசவுக் கார சுன்னஞ்
சமுச்சயங்க ளில்லாமல் வெளியாச் சொல்வேன்
மெய்ப்பான கும்பிடுங்கற் சுன்ன மார்க்கம்
விள்ளாதே மறைத்தாரே சித்த ரெல்லாம்.
அப்பனேகேள் கிளிஞ்சல்எனும் ஊமை தன்னை
அடைவாகச் சுத்திசெய்யும் வகையா தென்றால்
உப்பான உவருடனே கற்சுண் ணாம்பை
உணர்வாகத் தண்ணீரில் கலக்கிக் கொள்ளே.

3. கழன்றுபோ காதபடி வழலை மார்க்கம்
காட்டுகிறேன் கற்சுன்னம் படிதான் ஒன்று
தழைந்தோங்கும் படிநல்ல அமுரி ஓட்டில்
தானரைத்துக் கலக்கிவைப்பாய் தாழ்வில் லாமல்
குழைந்துபோ காதபடி தெளிவை வாங்கிக்
கொட்டப்பா தீட்சைசெய்த புட்ப மெட்டும்.
உழன்றுபோ காமலே கலக்கிக் கொண்டே
உத்தமனே செயும்வகையை உரைக்கக் கேளே.

4. கேளப்பா மேலான தீட்சை யுப்பு
கிரமதாய்ப் படியிட்டுக் கிண்டிப் போடு
ஆளப்பா தீட்சையென்ற என்பா யானால்
அறைகடலி னுப்பன்றோ வாயி னாதம்
தூளப்பா கடைவதுபங் குனியின் மட்டும்
துரிதமா ரவியில்வைக்க உப்பே யாகும்
ஆளப்பா உப்பெடுத்துக் கீறிப் பார்த்தே
அடியின்நடு வெடியுப்பு மூடிமேல் வையே.

## ஆனந்த கந்தம்—மகரல் வெளியீடு

பக். 7 *சித்தர்கள்*

1. நாதர்வழி — திருமூலர், கோரக்கர், நித்யநாதர்
2. பைரவர் வழி — காலங்கர்
 மந்தான பைரவர்
 சுவசந்த பைரவர்
 பைரவர்
 காகசண்டி பைரவர்

பக். 35

நட்சத்திரங்கள், கிரகங்கள், தமது கிரணங்களால் இவ்வாதத்தில் மிகவும் உதவுகின்றன. இவ்வித்தை அகத்தியர் காலத்தில் 18 அங்கங்கள் கொண்டதாகவும், சட்டை முனிவர் காலத்தில் 21 அங்கங்கள் கொண்டதாகவும் இருந்ததாகத் தெரிகிறது.

பக். 34

தமிழ் கிரந்தங்களில் 212 தாது வகைகள் கூறப்பட்டுள்ளன. உப்பு 25, பாடாணம் 64, உபரசம் 112, உலோகம் 9, ஆக 210. ரசம் கந்தகமும் சேர்ந்து தாதுக்கள் கணக்கிடப்படுகின்றன.

**குறிப்பு:** உபரசம் 120 என்பது சித்த மருத்துவப் பொது வழக்கு.

### ஆனந்த கந்தம்

பக். 6

சிவன்தானும் வடமொழியில் வாத மார்க்கம்
 சிறப்பாக இருலட்சங் கிரந்தந் தன்னைக்
கவந்ததுமைந் தாம்வேத தத்திற் சொன்னார்
 கருணைபெற உமையவளும் தமிழாய்ச் செய்து
பவத்தானும் நந்திக்குச் சொன்ன போது
 பார்தவரும் நந்திதன்வந் திக்குச் சொன்னார்
தவந்தானும் தன்வந்திரி அசுவ னிக்குத்
 தகைபெறவே அசுவனியும் விசுவ னிக்கு

சொன்னதொரு விசுவனியும் அகத்தி யர்க்குச்
 சொல்லிடவே அகத்தியரும் புலத்திய ருக்கு
சொன்னதொரு புலத்தியரும் தேர ருக்குக்
 கருணைபெற வேதேரருமே யூகிக்குத்தான் (வாதகாண்டம்)

## இரசவாத சிந்தாமணி

பா. அப்துல்லா சாகிப்—மறுபதிப்பு—பழனி ஆண்டவர் திருக்கோவில்—1975

பக். 22

### முப்பு

மூவுப்பு அல்லது மூன்றுப்பு என்பது முப்பு என மருவிய சொல்லா யிருக்கலாம் என்பது சிலர் கருத்தாகும். இக்கருத்திற்கு இசையவே முப்பு என்பது நீருப்பு, வாயுப்பு, தீயுப்பு, என்னும் மூவகை உப்பால் செய்யப்படுகிறது என்கிறார்கள். பூநீர், நவச்சாரம், வெடியுப்பு என்ற மூன்று வகையுப்பின் தொடர்பாகச் செய்யப்படுவது முப்பு எனப்படுகிறதென்பது பெரும்பாலோர் கருத்து.

வேறு சிலர் பூநீர் என்னும் ஒன்றிலேயே மேற்கண்ட நீருப்பு என்னும் மூன்று வகையுப்புகள் இருக்கின்றன; ஆகையால் மேற்படி பூநீரைப் பாகப்படுத்தி அவற்றைப் பிரித்துப் பின்பு மூன்றைச் சேர்த்துச் செய்வதே முப்பு என்கிறார்கள்.

இது எப்படியாயினும் முப்பு என்பது பூநீர் தொடர்பான ஒரு வகை ஏற்பாடு என்பது புலனாகின்றது.

பூநீர் என்பது பூசாரம். அதாவது சுவையற்ற பொருள் எனப் பொருள் படும்.

பக். 23

பூநீறு என்பது வழலை நிலவீரம் அல்லது ஒரு வகை உப்பெனப் பொருள் படுகிறது. இன்னம் வழலையென்பது சவுக்காரம் அல்லது வழலை யுப்பு எனவும் பொருள்படுகிறது.

*கட்டு வகைகள்:*

மருத்துவம், இரசவாதம் என்ற இரு வகைகளுக்கும் பயன்படும் பொருள்களின் கட்டுகள். இவை ஒவ்வொன்றிலும் பற்பல வகைகள் உண்டு.

*வெட்டைகள்:*

பற்பம், செந்தூரம் முதலியவைகளாகச் செய்ய உலோகங்களை வெட்டையாக்க வேண்டியது அவசியமாகையால் தாமிரவெட்டை, தங்க

வெட்டை, வெள்ளி வெட்டை, வெள்வங்க வெட்டை, கடுவங்க வெட்டை, நாக வெட்டை, இரசவெட்டை, அயவெட்டை முதலியவைகளும்.

**வங்கமெடுத்தல்:**

சில உலோகங்களிலிருந்து அல்லது சில சரக்குகளிலிருந்து ஈயத்தைப் பிரிக்கலாம்.

**வாத வெள்ளி:**

வேதை வெள்ளி (Chemical Silver) செய்யும் பலவகை முறைகளும்.

**வாதப்பொன்:**

வேதைப்பொன் (Chemical Gold) செய்யும் பலவகை முறைகளும்

**வைப்பு முறைகள்:**

அதாவது தாழ்ந்த பொருள்களால் உயர்ந்த பொருள்களைச் செய்தல் அல்லது செயற்கைப் பொருளால் இயற்கை போல் செய்தல். கஸ்தூரி வைப்பு, குங்குமப்பூ வைப்பு, அம்பர் வைப்பு முதலிய பற்பல வகைகளும்.

பக்கம். 3

## இரசவாதம்

(அ) இரசவாதம் என்பது இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களான பொன் முதலியவைகளாய் மாற்றும் முறைகளைச் சொல்லும் நூலுக்குப்பெயர். இது பொதுவாய் வழங்கப்படும் கருத்தேயொழிய அதன் பதப்பொருள் அல்லது அதன் உண்மையான அருத்தமல்லவென்பது பலர் கருத்து.

(ஆ) இரசவாதம் என்பது பாதரசம் என்னும் பொருளின் மூலமாய்ச் செய்யப்படும் வித்தை, வேடிக்கை, வினோதம், மாரணம் முதலியவை களுக்குப்பெயர்.

(இ) இரசவாதம் என்பது (இரசம் = பாதரசம். வாதம் = வாதித்தல், பாதரசம் என்னும் பொருளால் மற்ற உலோகங்களை வாதித்தலுக்குப் பெயர். பாதரசமானது பெரும்பாலும் உபரசங்களுக்கு மூலமாகவும், முதன்மையான

தாகவும் மற்றவைகளைக் காட்டிலும் அஃது அதிகமாய்ப் பயன்படுத்தப்படு கின்றபடியாலும் மற்றவைகளைப் பார்க்கிலும், இதில் அனேக மேன்மை யான குணங்களிருக்கின்றபடியாலும், மிகுதி பற்றியும் இரச வாதம் என. வழங்கப்படுகின்றது என்பது சிலர் கருத்து.

வாதம் என்பது இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும் வித்தை. இது சாதாரணமாக வழங்கப்படும் வழக்கேயொழிய மற்றபடியன்று அல்லது இரசவாதத்தின் மாறுபாடாயிருக்கலாம். வாதம் என்பது மாறுபட்ட கருத்தின் முடிவு. அதாவது ஒன்றைப் பற்றி விவரிக்கும் நூலென அருத்தமாம்.

வேதை = வேதித்தல் அதாவது பேதித்தல்.

ஒன்றை மற்றொன்றாக மாற்றுதலாகும்.

பக்கம். 5

இரச வாதம் என்பது பொருள்களின் தோற்றப் பொருத்தத்தை நமக்குக் கற்பிக்கும் நூலாம்,

## இரசவாதம்

பக்கம். 6

1) இயற்கை ரசவாதம்
2) வைத்திய ரசவாதம்

## பிராணப் பொருட்கள்—குணம்

பக்கம். 12

1) ரசம்

2) நவச்சாரம்

1) பதங்கமேறுதல்
2) சுண்ணமாதல்
3) நீர்வடிவம் வேறுபடுதல்
4) கட்டுப்படுதலாம்.

## ரசத்தைக் கட்டுவன

| | |
|---|---|
| 1. இருவகை தாளகங்கள்<br>2. இருவகை கந்தகங்கள்<br>3. இருவகை படிகாரங்கள் | ஆறு வகைகள் |

## பூநீர் பெயர்

பக். 18

1. வழலை

2. அண்டம், பிண்டம்

3. இடகலை, பிங்கலை, சுழுமுனை

4. அம்பு, எரி, பரிதி, மதி, வில்—5

5. அரிதாரம், இடி, இரண்யகர்ப்பம், இறையம், கோசம், கௌரி, தனித்தியம், அண்டம், மேகம் வாயு—8-10.

6. அமுரி, உரி, உவர், உவர்மணல், கடுக்காய், சிகை, சுண்ணம், தசை நஞ்சு, முக்குணஜல், நஞ்சு, நாதம், பாடாணம், பூமிநாதம், வயிரம், விந்து,

**வெள்ளைக்கல் 16**

7. அடி, அம்மாவாசை, அரக்கி, ஊனுப்பு, 51, கணபதி, கம்பி, கருநெல்லி, கிரகம், குயவன், கொள்ளி, நடு, ஒன்பது மூலி, நீருப்பு, பிரதமை, பூநீர், மிதுனம், முடி, மேடம், உப்பு, வண்ணான், குறும்பன், விஷம், வெடியுப்பு, வெண்சாரை—25.

8. அனாமி, எழுபிறப்பு, ஐவர், ஓசை, கண்மணி, கதிர், கமலம், காமி, குடிபோம் வீடு, கூற்றன், சாரி, சிங்கு, சுடர், கட்டல் தான் தோன்று, கற்பூரம், நாயகம், நிலப்பூடு, நீரன்னம் பச்சை, படிகம், பண்ணை, பரமன், பீடையுப்பு, கொழுப்பு, பொட்டல் மடையன், மணற்பொடி, மலம், மவுனம், மாசி, முயல், விங்கம், விஷ்ணு, வெடி, வெளி—36.

9. நெருப்புக்கட்டி, நெருப்பு, இரும்பு, அவுரி, இந்திரகோபம் இரசம், இராச வர்க்கம், உரம், உருளை, ஏகசவுக்காரம், ஏமம், ஒளி, கடலிற்பாசி, கண்டங்கத்தரி, கண்ணாடி, கந்தம், கரடு, கரந்தை, கரும்பூனை, கருவி, களிஅன்னம், கனல், கனல் மேலுப்பு, கன்னி, கன்மம், காரீயம், காவி, குங்குமம், குரு, குருத்து, கொக்கு, கொச்சி, கொடி, கொன்றை, கோதை, கோமயம், கோரொசனை, சங்கமம், சங்கு சந்நியாசி மண்டை, சமாதி, சரபீசம், சர்ப்பம், சாளக்கிராமம், சிங்கு, சுக்கான், சுத்தம், சூக்குமம், சூலம், சொறி, சோடசம், வேதி, சோமநாதம், தலைப்பிள்ளை, தாது, திருமேனி, துத்தி, துருசு, தூலம், தேர்கால், தொட்டி, நண்டோடு, நந்தி, நாகம், நிலவுப்பு, பஞ்சமித்திரம், படலம், பரம், பரி, பாலைநிலம், புத்தான், புரியட்டம், புனுகு, பூரம், பூர்ணம், பொன்னூமத்தைவித்து, மகரம்.

## அக. வாதகாவியம் 1000

### காரசாரம்

பக் சய

வசனிப்போம் சவுக்கார மேதென் றாக்கால்
மகத்தான அண்டவினது அதுவே யாகும்
வசனிப்போம் பிண்டவிந்து நாத மாகும்
ஓமக்காள் காரமென்ற தத்துவே யாகும்
அசனிப்போ அதுரெண்டு சிவமே சத்தி
ஆச்சுதப்பா அதனாலே அனேகம் வித்தை
ஒனிப்போ முடுவால முன்னோ டாகி
உலகமெல்லாம் பிரம்மமென்று உணத்தோ நாமே.

உரைத்தவிதி என்னவென்றால் ஊமை ஊமை
ஓகோகோ உருளைநடு வட்டம் வட்டம்
கரைத்தகரு மதுசாரம் சாரம்
கருவான வெண்கருவால் அனேக வித்தை
அரைக்கமெழு கானவித மேஎன் றாக்கால்
அண்டமென் றதுனாலே பிண்ட மாச்சு
உரைத்தவிதி பரப்பிரம மூன்னும் கூட்டி
முக்கருவி னாலேயல்லோ முடித்த வாறே

Pills — மாத்திரை

Confection — லேகியம்

Liniment — பூச்சு

Ointment — களிம்பு

Plaster — ஒட்டுமருந்து

Blister — வாய் கழுவு மருந்து

Decoction — கியாழம்

Mixture — கலவை

Tincture — எரிதிராவகம்

Extract — சத்து

Spirit — எரிசாராயம்

**கோரக்கர்—ஏழு நூற்றொரகுதி—பழனி-1975-பதிப்பு**

**பாடல் 175:**

சொன்னலங்கள் பெருகிடவே இன்னும் கேளு
சூதில்லா வாதமொடு வைத்தி யத்தான்
நன்மையாய்க் கருவங்கம் அதையு ருக்கி
நண்டுசா றதனில்மூன்று விசையே சாய்த்து

கன்மமற காட்டுமருக் கொழுந்து சாற்றால்
காரிய மரைத்துபுட கௌதா ரிபோல்
பின்னமற ஏழுபுட மிடச்செந் தூரம்
உற்றசெம்பு வெள்ளிபத்துக் கொன்று தாக்கே.

## சீனக்காரச் செந்தூரம்

**பாடல் 181:**

உள்ளறிந்து பார்த்தவனே ஞானி ஞானி
ஓதுமுறை பராபரியாள் சொன்ன சூட்சம்
கள்ளமற நாய்ப்பாகல் சாறு தன்னால்
கனமான சீனமதைச் சாமம் ரெண்டு
சள்ளையற அரைத்துவில்லை ரவியு லர்த்தி

**பொருள்:**

சீனாக்காரத்தை நாய் பாகல் சாறு விட்டரைத்து, வில்லைதட்டி, புடமிட செந்தூரம். உலோகங்களில் கொடுக்க பசும் பொன் மாற்றாகும்.

**மேற்கோள்:**

''பவமான தறுக்குமடா, சீனக்காரம் படுமுன்பே
• லோகமெல்லாம் பசும்பொன் மாற்றே''

அகத்தியர் பெருநூல் 12ஆம் காண்டம் (பாடல் 247

## நவச்சார செந்தூரம்

**பாடல் 182:**

மாத்தவும் மயங்காது நவச்சா ரத்தை
மகிழுடைய அவுரிச்சாறு தன்னாற் சாமம்
காத்திருந் தரைத்துவில்லை வெய்யோ னிட்டுக்
காடையோடு புடந்தீரக் களங்க மில்லா
தேத்தியுயர் செந்தூர மிதற்கீ டில்லை
தேடுவார் இரசவாதி சித்தர் மார்கள்
சூத்திரத்தி விந்தமுறை சுளுவாய்ச் சொன்னேன்
செம்புவெள்ளிக் கியமாத்துப் பதினா றாமே.

**பொருள்:**

நவச்சாரத்தைத் அவுரிச் சாற்றாலரைத்துக் காடைப்புடமிடச் செந்தூரமாகும். பதினாறு மாற்று உண்டாகும்.

**மேற்கோள்:**

"தேடுவார் இரசவாதி சித்தர் மார்கள்
செப்பரிய செந்தூர மாகு மென்று
கூடுவார் குகைதோறும் நவச்சா ரத்தைக்
கொள்ளுவா ரள்ளுவார் நவமி தென்றே"
(அகத்தியர் பெருநூல் 2ஆம் காண்டம் பாடல் 246)

## தாயுமான அடிகள் திருப்பாடல்கள்

(சை.சி. நூற்பதிப்பு கழகம், சென்னை)

பக்-8

### பரிபூரணானந்தம்

"ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல்லாம் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணை செல வேநினைவா அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தை கலைத்திடுவார்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுறைவர் எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதுவும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும் நான்நான் எனக் குளறியே
ஒன்றை விட் டொன்று பற்றி
பாசக் கடற்குளே வீழாமல் மதைற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணுந்தமே.

பக்கம். 21

"பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றி இப்
பொய்வேட மிகுதி காட்டி" (மௌன குரு வணக்கம்)

பக்கம். 31

"ஓட்டினை எடுத்தா யிரத்தெட்டு மாற்றாக
ஒளிவிடும் பொன்னாக்குவீர்
உரகனும் இளைப்பாற யோக கண்டத்திலே
உலகு சுமையாக வருளால்

பக்கம். 31

மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனல்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரச னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (சித்தர்கணம்)

இரசக்குளிகை — இரும்பைப் பொன்னாக்கும் மருந்து

இரசவாதி — இரும்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்குபவன்
(பக். 113, கழக தமிழ் அகராதி, 1980)

இரசவாதம் — Iraca—Vatam, N<ID+UDDA: Transmuting Baser Metals, in to gold, Alchemy.

உலோகங்களை பேதிக்கச் செய்யும் வித்தை

இரசவாதி—Iraca—Vati
N<ID+

Alchemist—உலோகங்களை பேதிப்போன்

(லெக்சிகன், 1936, சென்னைப்பல்கலைக்கழகம்)

1. திராவகம் — உப்புகளை வாலையிலிட்டு, இறக்கிக் கொள்ளுதல்

2. கட்டு — சுருக்குக்கொடுத்து, கட்டியாக்குவது

3. செயநீர் — காரநீரை, வலிமைமிக்கதாக, எந்த உலோகத்தையும் கரைக்கும் திரவம்

4. மெழுகு — 1) அரைப்பு மெழுகு 2) சுருக்கு மெழுகு

5. செந்தூரம் — 1) எரித்தல் 2) வறுத்தல் 3) அரைத்தல் 4) புடமிட்டு எடுத்தல்

6. குரு — வாலை ரசத்துடன் சேர்த்துக் கட்டி மணியாக்குதல்

7. வழலை சுன்னம் — அரைத்து உலர்த்திக்கரி நெருப்பிலிட்டு ஊதி எடுப்பது

9. கற்பம் — பத்திய முறைப்படி உண்டு வரவேண்டிய மருந்து

10. களக்கு — சுருக்குக் கொடுத்து, புடமிட்டுக் கொண்டு, ஊதியெடுத்து, மணியாக்கி உருக்கி, தங்கம் நாகம் சேர்த்து ஆற வைத்து எடுப்பது.

**ரசக்கலவை**

1. ஜலகதி — நீர்போலக் கலத்தல்
2. மலகதி — அழுக்குப்போல் பிரிந்திருத்தல்
3. ஹம்சகதி — பிரிந்தே இருத்தல், (கலவாமல்)
4. தூமகதி — ஆவியாகும் நிலை

(இரசவாதக்கலை, மே.சி. சுப்ரமணிய வைத்தியர், தாமரை நூலகம், பக்.48,

**வல்லாரை:**

சரஸ்வதி, சண்டகி, புண்டரி, யோசனவல்லி, போகுடுசெட்டு மண்டூகா, குடகம், பிரம்மி ஒண்டவாசி, கூலாக்குடி (வேறுபெயர்கள்) (பக். 128, இரசவாதக்கலை).

''கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத் தாட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்.
சல மேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்'' (தாயுமானவர்)

''எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா
யானும்வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்''

(பாரதியார்)

## துணை செய்த நூல்கள்

1. அகத்தியர்—வைத்திய காண்டம்

2. யாகோபு—வாத காவியம் 300—பக். 42

3. பரி பாஷை திரட்டு—

4. தாயுமானவர்பாடல்கள்
சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

5. அகத்தியர் பூரணம் 400
கோரக்கர்—ஏழு நூற்பதிப்பு—
சேதுரகுநாதன்—பழனி—1975—பதிப்பு
சித்த மருத்துவ வாரியம், சென்னை.

6. இரசவாத சிந்தாமணி—Dr. முகமது அப்துல்லாசாகிப்

7. ஆனந்த கந்தம்—மகால் பதிப்பு